சத்தியவேத

# பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்," யாழ்ப்பாணம் தொலைபேசி: 360

Registered At The Ceylon G. P. O. As A Newspaper.

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால், அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" (சங்கீ. 126)

94-ம் புத். | 1969-ம் ஆண்டு மாசி மீ 1-ந் உ சனிக்கிழமை—பிரதி சதம் 15 | 4-ம் இல.

## "மெசஞ்சர்" பத்திரிகையின் நூற்றாண்டு நிறைவு

இலங்கையிலே இன்று இருக்கும் ஒரேயொரு ஆங்கில கத்தோலிக்க வாரப்பத்திரிகை "மெசஞ்சர்" பத்திரிகையாகும். இது கொழும்பு அதிமேற்றிராசனத்தில் வெளியிடப்பட்டாலும் இலங்கைக் கத்தோலிக்கர் யாவருடையவும் நன்மைக்காகவே வெளியிடப்படுகின்றது. இதன் நூற்றாண்டுநிறைவை ஞாப

[தொடர்ச்சி ஐந்தாம்பக்கம் பார்க்கவும்]

## ஒல்லாந்தில் திருச்சபை

"பரிசுத்ததந்தை 6-வது சின்னப்ப தந்தையின் பிறப்பொழுங்கு என்ற நிருபத்தினுல் ஒல்லாந்தில் பெரும்பாலான கத்தோலிக்கர் விசுவாசத்தில் தடுமாறுவதாகச் சில பத்திரிகைகள் மிகைபடக்கூறி உலகில் ஓர் அதிர்ச்சியை உண்டுபண்ண முயற்சிக்கிருர்கள்" என அவுஸ்திரேலியாவுக்குச் சேர்ந்தவரும், அண்மையில் ஒல்லாந்தில் நடந்த தேசிய சினொட் கூட்டங்களில் உலக அவதானிகளாகப் பங்குபெற்ற பத்திரிகை நிருபர்களில் ஒருவருமான வண. கஸ்ரிகன் சுவாமியார் கூறியிருக்கின்ருர். இதே கருத்துப்படவே ஒல்லாந்துக் கருதினுல் அல்பிறிங்க் அடிகளாரும் அண்மையில் இங்கிலாந்துக்கு விஜயம் செய்தபொழுது கூறியிருக்கின்ருர், ஒல்லாந்துக் கத்தோலிக்கர்கள் பரி. தந்தை பிறப்பொழுங்குவிஷயத்தில் பாரம்பரிய கொள்கையைச் சற்றுத் தளரவிடுவாரென நம்பியிருந்தார்கள். அப்படி நடவாததினுல் ஏமாற்றம் அடைந்தது உண்மையே. ஆனுல் இப்போது தமது கடமை என்ன என்பதை உணர்ந்துகொள்கின்ருர்கள்.

## தங்க ரோசா கொண்டுவருவோம்

வார்சோநகர் அதிமேற்றிராணியாரான கருதினுல் வைசின்ஸ்கி ஆண்டகை கம்யூனிஸ்த போலிஷ் அரசாங்கத்தாலே அனுமதிக்கப்பெற்று மூன்று ஆண்டுகளுக்குப்பின் முதன்முறையாகச் சென்றமாதம் ரோமாபுரி சென்றிருந்தபோது, அவருடன்சென்ற போலிஷ் மேற்றிராணிமாரும, அவரும் பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்துப போலிஷ் கன்னியாஸ்திரிமாரால் செய்யப்பட்ட "சசூபிள்" எனப்படும் பூசைவஸ்திரம்ஒன்றை அவருக்கு அன்பளிப்புச் செய்தார்கள். அவர் இந்த அங்கியை ஜாஸ்னு கோருஎனுமிடத்திலுள்ள மத்திய நூற்ருண்டுகாலப் புராதன போலிஷ் ஆச்சிரமத்திலே 1966 ஆம ஆண்டு பெறறிருக்க வேண்டியவர். அவர் அளித்த பதிலிலே, "ஜாஸ்னு கோருவிலே திவ்வியபூசை நிறைவேற்ற இந்தத் திருவஸ்திரத்தை நாம அணியக்கூடியவராய் இருக்கும்போது இதனை நாம் அங்கு நமமுடன் கொண்டு வருவோம்" எனக் கூறினர்.

"தாம் போலாந்தைத் தரிசிக்க முடியாதிருப்பதையிட்டுப் பரிசுத்த தந்தை ஆழ்ந்தகவலை அடைந்துள்ளார். மார்கழி 7ஆம்திகதியனறு நடைபெற்ற ஒரு சம்பாஷணையிலே, இப்பொழுது தானும் இதுகாரியம தமக்குத் துன்பம் தாக கூடிய தென எடுத்துக்கூறினுர். இவ்விதம் அவர் கூறியபின் "நமக்குச் சந்தோஷம் உண்டுபண்ணக்கூடிய யாதொன்றைச் செய்யநீங்கள் சிந்தித்துக் கொண்டு இருப்பது மட்டுமோ? நாமும் உங்களுக்குச் சந்தோஷம் உண்டுபண்ணுமாறு போலாந்துக்கென நாம் சித்தஞ்செய்திருப்பதைஉங்களுக்குக்காணபிப்போ" மென்று சொல்லிப்போலாந்துக்குக் கொண்டுபோகவென்று காத்திருக்கும் தங்கரோசாவைக் காண்பித்தார். அதன்மேல "நாம் அன்றேல் நமக்குப்பின் வருகிறவர் ஒருநாள் போலாந்துக்கு இதைக் கொண்டுவருவோம்" எனக் கூறினுரெனக் கருதினுல் ஆண்டகை தெரிவித்திருக்கிருர்.

## உலகில் சமாதானம் ஏற்படுவதில் பரி. தந்தைக்கு நம்பிக்கை

கலகங்களும் குழப்பங்களும் தலைகாட்டி உலகசமாதானத்துக்குப் பங்கம் விளைவிக்கும் ஆபத்து இருந்த பல இடங்களிலும் 1969-ம் ஆண்டில் நிலைமை திருந்தி உலகில் சமாதானம் நிலைநாட்டப்படுமென்று நம்பிக்கை கொண்டவராகப் பரிசுத்ததந்தை சமீபத்தில் அளித்த பேட்டியொன்றில் கூறியிருக்கின்ருர். மத்திய கிழக்குப் பிரதேசத்தில் ஐக்கியநாடுகளின் சபையின் சார்பில் சமரசப் பேச்சுகளை நடத்திவருபவருக்கு இருசாராரும் கூடிய ஒத்துழைப்புக் கொடுக்கும்படியாகப் பரிசுத்ததந்தை விண்ணப்பித்துள்ளார், தென்வியற்னும், செக்கோசிலவாக்கிய ஆகிய நாடுகளின் நிலைமை திருந்தி இருப்பதையும் அவர் குறிப்பிட்டு மகிழ்ந்தார். ஆயினும் சமாதானத்துக்குத் தொடர்ந்து செபித்துவர யாவரையும் பாப்பரசர் கேட்டிருக்கின்ருர்.

## தென்வியற்னுமில் ஒரு குருவின் வீரமரணம்

தென்வியற்னுமில் டானுங் என்னும் அமெரிக்க இராணுவத்தை வியற்கொங் குழப்பக்காரர்கள் வெடிகுண்டெறிந்து தாக்கிக் கொண்டிருக்கும் போது அங்குள்ள நிலைமையினுல் கலக்கமடையாது சென்று அவஸ்தைப் பூசுதல் கோடுத்துக் கொண்டிருந்தபோது அக் குண்டுகளினுல் தாக்குண்டு மரணமடைந்த அமெரிக்க குருவானவர் வணக்கத்துக்குரிய கப்படொனே சுவாமியாருக்கு அமெரிக்க அரசாங்கம் அவர் மரணத்தின் பின்பு வீர மகிமைப் பட்டம் அளித்திருக்கின்றது. அக்குருவானவரின் வயது 39. இத்தகைய உயர்ந்த வீரப்பட்டம் பெற்ற மூன்ருவது குருவானவர் இவர்.

## கத்தோலிக்க தர்மம் வேறும் பேச்சில் நின்றுவிடவில்லை

வடகொழும்புப்பிரிவு பெரும்பாலும் கத்தோலிக்கர் வசிக்கும் பகுதியாகும். அது மாத்திரமல்ல இப்பகுதி வறுமைமிகுந்தது, அநேகர் வசிக்க இல்லம் இல்லாதவர்கள். உணவுக்குத் திண்டாடுகிறவர்கள். இங்கே கத்தோலிக்க தர்மஸ்தாபனங்கள்பல தம்மாலான உதவிகளை இவர்களுக்குச் செய்துவருகின்றன. இல்லம் இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் இயக்கம் ஒன்று அண்மையில் அங்கு தொடங்கப்பட்டது. அதன் பயனுக முதல்வீடு ஆயத்தமாய்விட்டது. மிகவறிய குடும்பம் ஒன்றுக்கு அது கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த இயக்கத்தைக் கத்தோலிக்க பத்திரிகை ஸ்தாபனமாகிய "மெசெஞ்சர்" ஆரம்பித்து வைத்ததனுல் அதற்கு "மெசெஞ்சர் இல்லம்" என நாமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல இல்லங்கள் தயாராகின்றன.

## ஆங்கில கல்வி மந்திரியின் உறுதிவாக்கு

இங்கிலாந்தில் அரசாங்க பள்ளிக் கூடங்களில் சமய கல்வியும் சமயச் சடங்குகளும் முற்ருக அகல வேண்டுமென ஒருசிலர் கிளர்ச்சி செய்துவந்தபோதிலும் விரைவில் கொண்டுவரப்பட இருக்கும் புதிய கல்விமசோதாவில் சமய போதனைகளுக்கும், மத அனுஷ்டானங்களுக்கும் தகுந்த இடம் அளிக்கப்படுமென கல்விமந்திரி உறுதி கூறியிருக்கின்ருர். "சமயகல்வியும், அனுஷ்டானங்களும் அரசாங்க பள்ளிக் கூடங்களிலிருந்து அகற்றப்படுமாயின் இருசந்ததியினர் காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் கிறீஸ்துவ நாகரீகம் முற்ருக அழிந்துவிடும்" என்ருர கல்விமந்திரி திரு. எட்வட் ஷோட் என்பவர்.

## குருவானவருக்கு 5 வருட கடும்ஊழியத் தண்டனை

சோவியற் ருஷியாவிலே பைசன்ரைன் பிரிவைச்சேர்ந்த கிறிஸ்தவ சபை அனுமதிக்கப்படவில்லை. 1946-ம் ஆண்டு பைசன்ரைன் பிரிவினரை ருஷிய ஒதொடொக்ஸ் பிரிவினருடன் சேர்ந்துகொள்ளச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆனுல் அதன்பின்னும் அப்பிரிவு மறைவில் இருந்தேவருகின்றது. இப்பிரிவினருக்குத் திருச்சடங்குகள் செய்த குற்றத்துக்காகவே வணக்கத்துக்குரிய அன்ரின்பொற்ரேச்சியாக் என்னும் குருவானவருக்கு 5வருட கடும்ஊழியத் தண்டனை விதிக்கப்பட்டது.

## ஆயரின் கண்டனம்

தமது தேசத்தில் ஒருசதவீதமான தொகையினராகிய நிலச்சுவாந்தாக்கள் நாட்டின் 50 சதவீத நிலப்பரப்பை உடையவர்களாய் வறியவர்களுக்கு நீதிசெலுத்த இடமளியாதிருப்பதைப் பிறேசில் தேச ஆயர் அதிமேற்றிராணியார் ஹெல்டர் கமரு அடிகளார் வன்மையாகக் கண்டித்திருக்கிருர். அவருடைய தேசத்தில் இப்போது இராணுவ சர்வாதிகார ஆட்சி நடைபெறுவதனுல் அவருடைய கூற்றுக்கள் அத்தேச பத்திரிகைகளில் வெளிவராவிடினும் பிராண்சுதேசப் பத்திரிகைகள் இவற்றை வெளிப்படுத்தியிருக்கின்றன.

## வத்திக்கானில் சம்பள உயர்வு

இவ்வருடம் தொடக்கமாக வத்திக்கானில் தொழில்செய்துவரும் யாவருக்கும் 6 சதவீதம் சம்பள உயர்வு கிடைத்திருக்கின்றது. மிகக்குறைவான சம்பளம் பெற்றவர்களும் பெருங்குடும்பத்தலைவர்களும் பிறரிலும்பார்க்கக் கூடியவிகிதத்தில் சம்பள உயர்வு பெற்றிருக்கின்றனர். 23-ம் அருளப்ப பாப்பரசரின் ஆட்சியின்போதும் இத்தகைய சம்பள உயர்வு நடைபெற்றது.

## அரசாங்க சுவிகார சமயமுறைக்கு எதிர்ப்பு

சுவீடன் தேசத்திலே லூதரன் சபையினருக்கே அத்தேச அரசாங்கம் விசேஷ ஆதரவு அளித்து வருகின்றது. இத்தகைய சுவிகாரசமய முறை முடிவுபெறவேண்டுமென மறுசமயத்தவர் யாவரும் ஒன்று சேர்ந்து அத்தேச அரசாங்கத்துக்கு விண்ணப்பித்திருக்கின்றனர்.

இதற்கு லூதரன் சபையினரிலும் பெருமளவு ஆதரவு உண்டு. இவர்களுடைய விண்ணப்பத்தில் பின்வருவன அடங்கியுள்ளன.

- அரசாங்கம் சகல சமயங்களுக்கும் சனத்தொகை விகிதத்தில் பண உதவி செய்யவேண்டும்.
- இப்போது இருக்கும் கோவில்களைப் புதுப்பிப்பதற்கோ, தேவைக்குத்தக புதியகோவில்கள் கட்டுவதற்கோ அரசாங்கம் உதவவேண்டும்
- பிறப்புப் பத்திரங்கள், விவாக பத்திரங்கள் முதலியனவற்றில் கைச்சாத்திடும் உரிமைகள் லூதரன்சபைக்குருமாருக்கு இருப்பது போல மறுசமய குருமாருக்கும் இருக்கவேண்டும்.
- அதுபோலவே சமயபள்ளிக் கூடங்கள் நடத்த அரசாங்கம் அனுமதிக்கவேண்டும்.

## ஆங்கிலேயரின் பரிசுத்தநாட்டு யாத்திரை

ஆங்கிலநாட்டிலிருந்து பரிசுத்த நாட்டுக்குச் சென்ற நத்தார் யாத்திரிகர்கள் தமது யாத்திரையை மிக அமைதியாக முடித்துக் கொண்டு திரும்பிவிட்டனர், அவர்கள் அங்கே தங்கியிருந்த 6 நாட்களிலும் யாதொரு அசம்பாவிதமான சம்பவங்களும் நடைபெறவில்லை ஆனுல் இடையிடையே தூரத்தில் வெடிச்சப்தங்கள் கேட்கப்பட்டன. இஸ்ருயேல் அரசாங்கம் அவர்களுடைய சேமத்துக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தது. அவர்கள் சென்ற வழிகளில் மறிக்கப்பட்டுச் சோதனை செயப்படும் நிலையங்கள் பல இருந்தன என்று யாத்திரையின் நிர்வாக உத்தியோகஸ்தர் ஒருவர் கூறினுர்.

● சீனுவிலிருந்து பறந்துவரும் பறவைகள்தான் "இன்புளுவன்சா" என்ற சளிச்சுரத்தைக் கொணடுவருகின்றனவா என்றகேள்வி இப்போது பிறந்திருக்கிறது. அப்பறவைகளிலுள்ள "வைறஸ்" என்ற விஷநீர்க்கலப்பினுல் தான் இந்தச் சளிச்சுரம் உண்டாகிறதென்று உலக வைத்திய ஆராய்ச்சி நிலையம் கருதுகின்றது.

● சோவியற்ருஷியா "ரியு-144" எனும் பாரிய பிரயாணவிமானம் ஒன்றைக்கட்டி அதனை 38நிமிஷம் பறக்கவிட்டுப் பரிசோதனை நடத்தியுள்ளது. இந்தவிமானம் 121பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணித்தியாலம் 1,550 மைல்வேகத்திலே பறந்துசெல்லக் கூடியதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

மாசி — 1969

| | | | |
|---|---|---|---|
| 2 | ஞா. | புனித கன்னிமரியின் சுத்திகர விழா | வெ |
| 3 | தி. | கிழமைப் பூசை | ஊ |
| 4 | செ. | புனித லங்கா மாதா | வெ |
| 5 | பு. | புனித ஆகத்தம்மாள் | சி |
| 6 | வி. | புனித தீத்தூஸ் | வெ |
| 7 | வெ. | புனித ரோமுவால்அஸ் | வெ |
| 8 | ச. | புனித மாத்தா அருளப். | வெ |

சத்தியவேத

பாதுகாவலன்

1969-ம் ஆண்டு மாசி மீ 1-ந்உ

## சுதந்திரமும் நாமும்

சுதந்தர இலங்கை கடந்த இருபத்தொரு வருடங்களாக முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. மின்வேகத்தில் இல்லாவிடினும் ஓரளவு திருப்திகரமான வளர்ச்சி பெற்று விளங்குகிறது. நாட்டின் சுதந்தரத்துக்காக உழைத்த பெரியார்கள் கண்ட கனவுகள் பல இன்று நனவாகி விட்டன. ஒரு நாடு அரசியல் சுதந்தரமுடையதாயிருந்தால் அதன் பலனை மக்கள் அனுபவிக்க வேண்டும். மத சுதந்திரம், மொழிச்சுதந்தரம், தொழில் சுதந்தரம், வாக்குச் சுதந்தரம், முதலிய பல சுதந்தரங்கள் இதற்கு இன்றியமையாதன. மக்கள் பசிப்பிணி, நோய், அறியாமை, அச்சம் ஆகிய உபாதைகளிலிருந்து விடுதலை பெற்று வாழவும் வழிபிறக்க வேண்டும். சமீப காலத்தில் சுதந்தரம்பெற்ற எத்தனையோ நாடுகள் பலவிதமான குழப்பங்கள், தொல்லைகளால் அவதியுறுவதைக் காணும்போது நாம் இந்த மட்டிலாவது சுதந்தரத்தின் பலன்களை அனுபவித்து வருகிறோமென இறைவனுக்கு நன்றி கூறவே வேண்டும்.

ஆனால், இலங்கை உலகுக்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய சிறப்பான நிலையை அடையவும்இல்லை. வளம்மிக்க பூமியும் நிலையான அரசாட்சியும் இருந்தும் பிரச்சினைகள் பெருகிக்கொண்டே போகின்றன, பஞ்சமும், போரும், பிணியும் இல்லாவிட்டாலும் வேலையில்லாத் திண்டாட்டமும், சமூகவிரோதமான செயல்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதைக் காணகிறோம். அரசாங்கம் கொடுக்காத பல சுதந்தரங்களைச் சிலர் தாமாகவே ஏற்படுத்திக் கொண்டுவிட்டனர் போலும். லஞ்சம் வாங்குவதற்கும், பொதுச் சொத்தை அழிப்பதற்கும், மக்கள் ஒழுக்கத்தைக் கெடுப்பதற்கும், கள்ளக்கடத்தல் செய்வதற்கும் தமக்குச் சுதந்தரம் உள்ளதெனக் கருதுவோரால் நாட்டின் நலன் பறிபோகின்றது.

கத்தோலிக்கர் தம் நாட்டின் மட்டில் உண்மையான பற்றுள்ளோராய் இருத்தல் வேண்டும்என வத்திக்கான்சங்கம் தெட்டத்தெளிவாய்க் கூறியுள்ளது. நாடு என்பது அரசையும் மக்களையும் குறிக்கும். மக்களின் நலனுக்குக் குந்தகம் விளைக்கக் கூடியவற்றைத் தவிர்ப்பது மட்டுமல்லாது அவர்களின் நல்வாழ்வுக்கு வழிகோலக்கூடிய காரியங்களில் கத்தோலிக்கர் பிறமதத்தினருடன் ஒன்றித்து உழைத்து வருதல் அவசியமாகும். மக்களுக்குச் செய்யும் தொண்டே நாட்டுக்குச் செய்யும் தொண்டாகும். பிற நாடுகளில் கத்தோலிக்கர் நாட்டுக்குச்செய்த சேவைக்காக விருதுகள்கூடப் பெற்றிருப்பதைப் பார்க்கும்போது, இலங்கைக் கத்தோலிக்கர் பொதுநலத்தைப்பற்றிய விஷயங்களில் போதிய அளவு அக்கறை காட்டாதிருந்தனரெனத் தோன்றுகிறது. இக்குறைபாட்டைக் களைவதற்கு இன்றைய கத்தோலிக்கர் முன்வருவார்களாக.

# மாசி மாதத்தில் மரியன்னை

மரியன்னையின் முக்கிய இருதிருநாட்களை மாசிமாதத்தில் கொண்டாடுகிறோம். முதலாவது சுத்திகரத் திருநாள் இரண்டாந்தேதியில் வருகிறது. சத்திய திருச்சபை மரியன்னையைக் கௌரவிக்கத் தனது விசுவாசிகட்கு அறிமுகப்படுத்திய முதலாவது திருநாள் இது.

இத்திருநாளுடன் மெழுகுவர்த்திகளை ஆசீர்வதிக்கும் சடங்கும் இடம் பெறுகிறது. ஆகவே ஆங்கிலத்தில் இத்திருநாட்பலிப் பூசையை candlemas (மெழுகுவர்த்திப்பூசை)என அழைக்கிறார்கள். மரியன்னை தேவபாலனைக் காணிக்கையாக்கிச் சுத்திகரச் சடங்கை நிறைவேற்ற தேவாலயத்துக்குச் சென்றாள். அத்தருணம் சிமியோன் அடிகளார் பாலகயேசுவைத் தம்கரங்களில் எடுத்து, "ஆண்டவரே! உமது அடியானைச் சமாதானத்தோடு போகவிடுகிறீர். ஏனெனில், தேவரீர் ஏற்படுத்திய இரட்சிப்பை என்கண்கள் கண்டுகொண்டன. இவர்புறசாதிகளைப் பிரகாசிப்பிக்கிற ஒளியாக விளங்குவார்" என்றார்.

இருளில் ஒளிதரும் வர்த்திகளைக் கிறிஸ்துவுக்கு உவமித்து இந்நன்னாளில் அவற்றை அர்ச்சித்து விசுவாசிகட்குத் தருகிறார்கள்.

மரியன்னை தனது ஏகபுதல்வனைக் காணிக்கையாக்க ஆலயத்துக்கு வந்தாள். தேவனின் தொண்டுகட்கு அவரை மகிழ்ச்சியுடன் அர்ப்பணித்தாள். இப்புதல்வனால் தனக்கு எந்தவித நன்மைகளும், அமைதியும் கிடையாதென்பதை அவள் அறிவாள். ஆயினும், வீரத்துவமிக்க மனதுடன் தனது ஏகபுதல்வனை இறைவனின் சந்நிதியில் காணிக்கையாக்கினாள்.

தங்கள் புதல்வர்களை இறைவனின் பணிக்கு அர்ப்பணிக்கும் அன்னையரனைவருக்கும் மரியன்னை நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறாள். இப்புதல்வர்கள் பின்னர் குருவாக, சந்நியாசராக மாறும்போது அவர்களின் சேவை பிறருக்கே கிடைக்கும். இவ்வெண்ணத்தை மனதிற்கொண்டு தங்கள் புதல்வரின் தேவஅழைத்தலுக்கு இடையூறாக எத்தனை அன்னையர்கள் முட்டுக்கட்டையிடுகின்றனர்.

காணிக்கைத் திருநாளன்றே மரியன்னையின் வியாகுலங்கள் ஆரம்பித்துவிட்டன. உமது இருதயத்தை ஒருவாள் ஊடுருவுமென்ற வாக்கியத்தால் அவள் எவ்வளவோ மனம்வருந்தியிருப்பாள். எனினும் மனுக்குலத்தின்மேல் அவ்வன்னை கொண்ட அளவிடற்கரிய பற்றுதல் தன்தேவபுதல்வனின் இரட்சணிய அலுவலில் தோளோடு தோள்நின்று உதவச் செய்தது.

மாசிமாதம் 11-ந்தேதி லூர்துபதியில் மரியன்னை தந்தகாட்சிகளை நினைவுகொள்கிறோம். ஒரு நூற்றாண்டுகட்கு முன்னர் மரியன்னை பிரான்ஸ் தேசத்திலுள்ள லூர்துதிருப்பதியில் மசபியேல் குகையில் ஏழைச்சிறுமி பெர்ணதேத்துக்கு அளித்த காட்சிகள் இவை.

இன்று உலகிலேயே மிகவும் அதிகமான பக்தர்கள், யாத்திரிகர்கள் வருடாவருடம் தரிசிக்கும் தலமாக விளங்கும் லூர்துதிருப்பதி, மரியன்னையின் திருசேத்திரங்களிலேயே முதன்மை பெற்று விளங்குகிறது. லூர்துதிருப்பதி பாவத்தால் கறைகொண்ட ஆன்மாக்கட்கு விமோசனமளிக்கும் தலமாக மட்டுமல்ல, தீராதநோய்களெனக் கைவிடப்பட்ட ஆயிரத்துக்குமதிகமான கொடியவியாதிகளைக் குணப்படுத்தியுள்ள ஆரோக்கியபதியாகவும பிரபல்யமுற்றுள்ளது.

திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட விசுவாச சத்தியமொன்றாக்கும் மரியன்னை இத்திருப்பதியில் சான்றுரைத்தாள். மாசில்லா அமலஉற்பவம் நாமே என்றுரைத்து, முற்றிலும மாசணுகாதநிலையில் மரியன்னை செனித்தாள் என்றபிரகடனத்தை உறுதிப்படுத்தினாள்

ஆவே மரியா என்ற மரிவாழ்த்துப் பாடலும், உள்ளத்தை உருக்கவல்ல மெழுகுவர்த்தி ஊர்வலமும் பிரான்சின் லூர்துபதியில் மட்டுமல்ல, மாசி 11-ல் அகிலஉலகிலுமுள்ள லட்சக்கணக்கான லூர்துகெபிகளில் ஒவ்வோராண்டும் நாம் காணக்கூடியதொரு நிகழ்ச்சியாக மாறிவிட்டது

தமது புதல்வனை எமக்காக அர்ப்பணித்தாள். அந்தப்புதல்வனின் இரட்சணிய அலுவலில் எல்லாம் உடன்சென்றாள். சிலுவையில்நின்று அத்திருமகனார் தமதன்னைபடும் வேதனைகளையும் கவனியாது எம்மனைவரையும் அவளது அடைக்கலத்தில் ஒப்படைத்தார். அத்துயரவேளை அப்பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாள் மரியன்னை.

தாய் தன் குழந்தைகளைப் புறக்கணிப்பாளோ? உலகம், சரீரம், பசாசு என்ற சோதனைகளால் மனுக்குலம் அலைக்கழிக்கப்பட்டுபாவச்செயல்களால் நமதாண்டவரை உளநோகச் செய்யும் போதெல்லாம் மரியன்னை பூவுலகில் காட்சிதந்து தன்புதல்வர்கட்கு எச்சரிக்கை விடுத்துள்ளாள். லூர்து, பாத்திமா, சலேத்து, குவாட்டலுப்பே முதலிய பலவிடங்களில் தோன்றி அன்னைக்குரிய பாசத்துடனும், அன்புடனும் எம்மை நல்வழிப்படுத்தும் போதனைகளைத் தந்திருக்கிறாள்.

இன்றைய உலகின் போக்கில் அதிருப்திகொண்டு அஞ்சிக்கலங்கி அமைதி எங்கே, சமாதானம் எங்கே என்று கலங்கித் தவிப்பவர்களும், ஆன்மீக அருட்பிரசாதங்களைத் தேடுவோரும் இந்த அன்னையின் எச்சரிக்கைகளைக் கவனித்து அவளின்வழியில் ஒழுகுவரேல் உண்மைஅமைதி உலகெலாம் நிலவும். மரியன்னையிஸ்வழி இலகுவான வழி. கடைப்பிடிக்தற்கு எளிய வழி. அவள் வழிச்சென்றால் பாதை தவறோம். நித்திய இன்பத்தைத் துய்ப்போம்.

— சாமுவேல் பெனடிக்ற்.

# உங்கள் புதியவருடத் தீர்மானந்தான் என்ன?

"உன்னதங்களிலே தேவனுக்கு மகிமையும், பூமியிலே நல்மனதோர்க்குச் சமாதானமும் உண்டாவதாக" என்ற தெய்வீக கானத்தை, அதாவது வானதூதர் பாடிய இன்னிசைக் கீதத்தின் அர்த்தத்தை, கிறீஸ்துவின் பிறப்பைக் கொண்டாடிய இந்நாட்களில் உணர்ந்தோமா? "பூமியில் நன்மனதோர்க்குச் சமாதானம்" என்று கூறினார்களேவானதூதர். நாமும் அந்த நல்மனதோர் வரிசையில் சேர்ந்திருக்கிறோமா? ஆழ்ந்து சிந்திப்போமாக. இங்கு நல்மனதோர் என்று குறிப்பிடுவது, கிறீஸ்துவினால் தெரிந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்போல் யாதொரு ஐயப்பாடுமின்றி, கிறீஸ்துவின் வாக்கியத்தில் முழுநம்பிக்கை வைத்து, அவரது அழைப்பில் பூரணதிருப்தியடைந்து, அவரது நற்செய்தியை மற்றவர்களுக்கு அறியச் செய்வதில் முழுச்சம்மதம் தெரிவித்து, அவருடைய பாடுகளிலும் ஒன்றித்து அதன் பயனாய் அவருடன் பேரின்பவாழ்வைப் பெறுபவர்களேயாம்.

இவர்கள் அறிவுடையோராயினும் சரி, அறிவற்றோராயினும் சரி, நல்மனமுடையோராயிருப்பின், அவர்களது தளராத விசுவாசத்தின் பயனாய் தேவ இராட்சியத்தின் பரம இரகசியங்களை தூயஆவியானவரின் பிரகாசத்தால் தேவை வரும்போது விளங்கிக்கொள்வர். (பரி. அருள. 16-ம்அதி. 13-ம்வ.) 'சத்திய ஸ்பிரீத்து சாந்துவானவர், வரும்போது சகலசத்தியத்தையும் உங்களுக்குப் படிப்பிப்பார்." இது நம் மீட்பர் யேசுவின் அமிர்தவாக்கு. தம்மால் சினேகிக்கப்பட்ட அப்போஸ்தலருடன் கடைசி இராப்போசன வேளையில் கூறிய ஈறாந்த பொன்மொழிகளில் விசேடம் பெற்ற, திரித்துவத்தின் பரம இரகசியம் இவ்வாக்கியம்.

இவ்வித தேறுதல் வார்த்தைகளால் அப்போஸ்தலர்களும் யாதொரு கபடமற்ற சிந்தனையுள்ளவர்களாயும், தாழ்ச்சியுள்ளவர்களாயும் நடந்து, தூயஆவியானவரைப் பெற்றபோது, சகலத்தையும் வெளிச்சத்தில் காண்பவர்கள் போல் விளங்கிக்கொண்டு, உற்சாகத்திடனும், மனத்தைரியத்துடனும் கிறீஸ்துவின் திருச்சபையை ஸ்தாபித்து கிறீஸ்துவின் சாட்சிகளாய்த் திகழ்ந்தனர். இது விஷயத்தில் அப்போஸ்தலருக்கும் மேலாக, நம் தேவ அன்னையை நம் மேல்வரிச்சட்டமாக வைப்போம். அவள் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் ஒருங்கே இணைத்து வைத்த எழிலரசி. பழைய ஏற்பாட்டு இறைமக்களுடன் காத்திருந்து உலக இரட்சகரின் வருகைக்காகச் செபித்தாள், இறைமக்களை வழிநடத்திய தேவவார்த்தையானவர் அவளின் உதரத்திலே உலக இரட்சகராக அவதரித்தார். இவ்விடத்தில் தேவ அன்னையின் நல்மனம் சமாதானத்தின் பிரபுவாகிய உலக இரட்சகரைப் பெற்றெடுத்து உலகுக்கு உவகையுடன் கொடுத்ததுமன்றி, கல்வாரிமலைப் பலியாகிய சிலுவைப் பலியிலும் உடந்தையாகி, புதியேற்பாட்டின் உடன்படிக்கையிலும் பங்குபற்றிக்கொண்டாள். விளக்கக்கூறின் சிலுவைப்பலி ஒப்புக்கொடுப்பில் முதலிடம் வகித்தவள் அவளே! அவ்வண்ணமே நாமும், தேவ அன்னையையும் அப்போஸ்தலரையும் பின்பற்றி, நாம் அறிந்த கிறீஸ்துவை, நாம் இரசித்த கிறீஸ்துவின் அன்பை நல்மனமாய் நம் சகோதரர்க்கும் அறியவைப்போம். நாம் எல்லோரும் நல்மனமுடைய அப்போஸ்தலராகவேண்டும் என்பது நம் நல்லதேவனின் விருப்பம். எப்படியெனில் நம் உள்ளத்திலுள்ள தேவ சினேகம் பெருக்கெடுத்துஓடி, எதிரிடையாக இருக்கும் அடைப்புகளை, தடைகளை எல்லாம் உடைத்துத் தகர்த்து, கரைபுரண்டோடி, பிறர் சினேகக் கிரிகைகளாக உருவெடுத்து, நம்மிலுள்ள கிறீஸ்துவின் தெய்வீக உயிரை மற்றவரிலும் பதியச்செய்து, அவர்களது வாழ்வையும் மலரச்செய்ய வேண்டும். இங்கே பரி. பவுல் அப்போஸ்தலர்கூறுவதுபோல, (பிலி. நிரு. 2, 5) "கிறீஸ்து யேசுவிடத்தில் உண்டாயிருந்த சிந்தைகளே, உங்களிடத்திலும் உண்டாயிருக்கக்கடவது." அதாவது நமது அப்போஸ்தலத் தொண்டு, நமது ஞானவாழ்வுப் பெருக்கின் பிரதிபலிப்பாய் இருக்க வேண்டும். ஆகையால் நாம் ஒவ்வொரு

(மறுபக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

### மகளிர் மன்ற நேயர்கட்கு அஞ்சலி !.......

இளைஞர்கள் இருவர் இருந்தனர், உலகைத்துறந்து சந்நியாச வாழ்க்கையை மேற்கொள்ள ஆசித்து தபோதனர் ஒருவரது மடத்தில் ஆயத்தநாட்களைக் கழித்தனர். மடத்து ஒழுங்குப்பிரகாரம் துறவறஉடை பூணுவதற்குமுன் அவர்கள் தம்வீடுகட்குச்சென்று இருமாதங்களைக் கழித்தனர். உலக ஆடம்பரங்கள் எதுவும் அவர்கள் துறவறஎண்ணத்தை மாற்றிவிடவில்லை. எனவே திரும்பவும் மடத்தைநோக்கிக் குறிப்பிடப்பட்டநாளில் சென்றுகொண் டிருந்தனர்.

வழியிலே ஓர்ஆறு தென்பட்டது. அதை அவர்கள் கடக்க முற்படும்போது அழகான ஓர் இளம்பெண் அவர்களைநோக்கி ஓடிவந்தாள். தன்னையும் தூக்கிச்சென்று அடுத்தகரையில் விடுமாறு வேண்டினாள். திரும்பிப் பார்த்தனர் இருவரும். துடியிடையும், மதிமுகமும், கொடிமேனியுமாகக் காண்போர் மனதைக் கவரும் மோகினியழகியாக நின்றுகொண் டிருந்தாள் அவள். கண்களை இறுகமூடிக்கொண்டே திரும்பினான் நாதன். விடுவிடென்று ஆற்றைக்கடக்கத் தொடங்கிவிட்டான். பாலன் இரங்கினான் அவளுக்காக. அவளைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு ஆற்றைக் கடந்தான். மறுகரை சென்றதும் அவளை இறக்கிவிட்டான். இருவரும் மடத்தைநோக்கி நடையைக் கட்டினர். வழிநெடுகிலும் நாதன் பாலனைக் கடிந்து ஏசிக்கொண்டே சென்றான். "நாம் துறவிகள், இளம்பெண்ணைத் தீண்டலாமா!" என்பதுதான் அவனது ஏச்சுக்களின் அடிப்படைப் பொருள்.

மடத்தைச் சேர்ந்தனர். தபோதனர் மகிழ்வுடன் வரவேற்றார். சேமலாபம் விசாரித்தார். "ஏதாவது விசேட சம்பவங்கள் உங்கட்கு நேர்ந்ததா ?" என்று வினவினார். "எதுவுமில்லை" என்று முகமலர்ச்சியோடு பதிலிறுத்தான் பாலன். "இல்லை குருநாதரே! பாலன் பொய்கூறுகிறான். வழியில் ஆற்றைக் கடக்க அழகான இளம்பெண்ணுக்கு உதவிசெய்தான். அவளது கொடிமேனியைத் தொட்டுத்தூக்கித் தன்தோள்மேல் சுமந்தான். இவனுக்குத் துறவியாவதற்கு இடமளிக்கலாமா ?" ஆக்ரோஷத்துடன் கூறினான் நாதன். "பாலன் !... இதற்கு நீரென்ன சொல்கிறீர்" அன்போடு வினவினார் தபோதனர். "சுவாமி! ஆற்றைக்கடக்க உதவுதற்காய்ப் பெண்ணொருத்தியைச் சுமந்துவந்தேன். ஆயின் அடுத்த கரையிலேயே இறக்கிவிட்டு வந்துவிட்டேன், நாதனோ வழிநெடுக, ஏன் மடத்திற்கு வந்தபின்னர்கூட அந்தப் பெண்ணின் நினைவைச் சுமந்துவந்திருக்கிறாரே. ஏன்! அவளை கொடிமேனி என்றுகூட வர்ணித்தாரே. அவள் எப்படி இருப்பாள் என்றுகூட நான் பார்க்கவில்லை. அந்தச் சம்பவத்தை ஆற்றங்கரையிலேயே மறந்துவிட்டேன்" என்றான். தபோதனர் மகிழ்ந்தார். "உன் தூயஉள்ளத்தை மெச்சினேன்" என்றுகூறி அவனைத் துறவியாக ஏற்றார். நாதனைநோக்கி: "துறவியாக வருவதற்கு உனக்கு முடியாது. ஏனெனில், உன்மனம் இன்னமும் அதற்குரிய பக்குவமடையவில்லை" என்றுகூறி அவனைத் திருப்பி அனுப்பினார்.

நேயர்களே! நாம் எந்தஒரு கருமத்தைச் செய்யும்போதும் அதைக் கடவுட் பணியெனக்கருதி, நற்கருத்துடன் செய்துவருவோமாக. — ரோஜா

# இறைவா!.... இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்!....

சொல்லாமலே விளங்குகின்றதே திவ்வியயேசு சிலுவையில் தொங்கித் துடித்தபோது தம்மை வதைத்தவர்களுக்காகச் செபித்த அதியுன்னதமான செபம் இதுவென்று !... கிறிஸ்தவ வாழ்விலே எத்தனையோ புண்ணியங்களையும், கடின தபக்கிருத்தியங்களையும் செய்துவருகின்றோம். ஆயின் எமக்குத் தீங்கு செய்பவர்கள் செய்யும் **தீமைகளை மன்னித்து மறப்பது, அவர்கட்காக மன்றாடுவது** என்பது உண்மையிலேயே கஷ்டமான காரியமாகத்தான் இருக்கின்றது. பின்வரும் ஜெபமானது நமக்கு மன்னிக்கும் மனப்பான்மையளிக்க நாம் இறைவனை வேண்டுவதாக அமைந்துள்ளது. இவ்வரிய புண்ணியத்தை நாம் அனுசரிக்கத் தயங்கும் வேளைகளிலே பின்வருமாறு மன்றாடுவோமாக !...

❁ சிலுவைமரத்திலே 3 மணித்தியாலமாகத் துடிதுடித்து மரண அவஸ்தைப்பட்டபொழுதும், உம்மை வாதித்த யூதருக்காக மனமிரங்கிப் பிதாவை நோக்கி வேண்டுதல் புரிந்த யேசுவே !... உம்மோடு சேர்ந்து பின்வருமாறு சொல்லக்கடவேனாக !...

*இறைவா !... இவர்களறியாமல் செய்கிறார்கள் !... இவர்களை மன்னித்தருளும் !...*

❁ நான் உள்ளன்புடன் நேசித்து, உடல் வருந்தி உழைத்து, எத்தனையோ நன்மைகளைப் புரிந்தவர்கள் நன்றி மறந்து நன்றியீனங்காட்டுவதுடன் நில்லாது, என்மேலேயே அபாண்டங் கூறும்போது பின்வருமாறு சொல்லக் கடவேனாக !...

*இறைவா !... இவர்களறியாமல் செய்கிறார்கள் !... இவர்களை மன்னித்தருளும் !...*

❁ உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசி, உத்தமசிநேகிதராய் நடித்துக் காலப்போக்கிலே எனக்கெதிராக வஞ்சனைகள் புரிந்து யூதாஸ் என்னும் துரோகி உம்மை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்ததுபோன்று எனது சிநேகிதர்கள் நடந்துகொள்ளும்போது பின்வருமாறு கூறக்கடவேனாக !....

*இறைவா !... இவர்களறியாமல் செய்கிறார்கள் !... இவர்களை மன்னித்தருளும் !*

❁ மனவியாகுலங்கள் அதிகரிக்க, கஷ்டமும் துன்பமும் என்னைச்சூழ மன்னிப்பின் மகத்துவத்தையே மறந்துபோய் எனக்குத் தீங்குசெய்தவர்கள் மேல் பழிவாங்க எனதுமனம் துடிதுடிக்கும்போது பின்வருமாறு சொல்லக் கடவேனாக !...

*இறைவா !.. இவர்களறியாமல் செய்கிறார்கள் !... இவர்களை மன்னித்தருளும் !*

❁ மாசற்ற நேர்மையான வழியிலே நான் வாழ்ந்துகொண்டிருப்பினும் அநீதர்களின் அபாண்டங்கட்குக் காது கொடுத்து எனது பெற்றோர்களும், அதிகாரிகளும், சோதரர்களும், உறவினர்களும் என்மேல் அநியாயக் குற்றங்களைச் சாட்டும்போது, நீர் பிலாத்துவின் முன்னிலையில் மௌனமாய் நின்றதை நினைவுகூர்ந்து பின்வருமாறு சொல்லக் கடவேனாக !...

*இறைவா !... இவர்களறியாமல் செய்கிறார்கள் !... இவர்களை மன்னித்தருளும் !*

❁ கத்தோலிக்க சேவைகளிலோ, பிறநற்கரும[illegible] துடனே [illegible] கூட அவற்றைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கிப் பிறர் என்மேல் பழிபாவமான அவதூறுகளைப் பேசும்போது பின்வருமாறு சொல்லக்கடவேனாக!...

*இறைவா !... இவர்களறியாமல் செய்கிறார்கள் !... இவர்களை மன்னித்தருளும் !*

❁ எனது கஷ்டதுன்ப வேளைகளிலே நீர் என்மேலிரங்கி அனுப்புகின்ற உதவிகளை நான் மனமுவந்து ஏற்று, அதிலே உண்மையான ஆறுதலையும் இன்பத்தையும் அடைவதைக்கூடப் பொறுக்காது, எனக்கெதிராகப் பிறர் சதிசெய்யும்போதும் பின்வருமாறு சொல்லக்கடவேனாக !...

*இறைவா !... இவர்களறியாமல் செய்கிறார்கள் !... இவர்களை மன்னித்தருளும் !*

# மியாவ்! மியாவ்! பூனைக்குட்டி!

### பறந்துசென்ற பைங்கிளியே !.... என்னம்மா !........

"அதிசயம்!....ஆனால் உண்மை !..." என்ற தலைப்புடன் அன்றைய பத்திரிகையில் வெளியாகியிருந்தது இந்தச் செய்தி. **"பஞ்சவர்ணக்கிளியொன்று காணாமல் போய்விட்டது. அதே வீட்டில் வளர்ந்துவரும் பூனைக்குட்டி சென்றது அதனைத் தேடி. உயிரோடேயே அதனைக் கொண்டுவந்து ஒப்படைத்தது வீட்டிலுள்ளோரிடம்."** உண்மையில் அதிசயம் தானே. பூனையாவது கிளியைத் தேடிவரப் போவதாவது!... அதிலும் உயிருடன் கொண்டுவருவதாவது !...ஆனால் நடந்த சம்பவத்தை யாரே அறிவார் !...

அன்று திங்கட்கிழமை. சிறுமி சாந்தாவின் வீட்டில் ஒரே ரகளை, கடைக்குட்டி ரவி கிளிக்கூண்டைத் தற்செயலாகத் திறந்துவிட்டுவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். சிறகடித்து வெளியே வந்தது "பெற்றம்மா" என்ற அந்தப்பஞ்சவர்ணக்கிளி. சிறிதுநேரம் வீட்டைச்சுற்றிப் பறந்தது. அப்புறம் வெளியே பறந்துவிட்டது. ரவி போட்ட கூக்குரலில் சாந்தா, மேனகா, பாஸ்கர், மனோகர் எல்லோரும் ஓடிவந்தனர், சேதிகேட்டுத் திகைத்தனர். ரவியைத் திட்டினர், "பெற்றம்மா !...பெற்றம்மா !..." என்று கூவியழைத்தனர். ஆனால் பெற்றம்மா என்னமோ திரும்பிவந்தபாடில்லை. சிறுவரெல்லோரும் கண்ணீர் வடித்தனர். வெறும் கூண்டைப்பார்த்துப் பார்த்து விம்மினர்.

### பதுங்கி நீயும் ஒழிவதேனோ !....பெற்றம்மா !....

அதேவீட்டில் வசித்துவந்த பூனைக்குட்டிக்கு முதலில் எதுவுமே புரியவில்லை. "ராஜி" என்பது அதன் செல்லப்பெயர். "பெற்றம்மா" புதிதாக வந்ததிலிருந்து அதுமட்டும் தன் கையில் அகப்பட்டால் சுவையான ஒரு விருந்தாக ரசிக்கலாமே என்று கண் போட்டு வைத்திருந்தது. ஆனால் இந்தச் சிறுவர் பட்டாளமோ அப்படி ஒரு சந்தர்ப்பத்தை ராஜிக்குக் கொடுத்ததில்லை. அதற்கு உள்ளூர ஆத்திரமிருந்தது. இன்றைக்கோ அவர்கள் அழுகையைப் பலமாக ரசித்தது. "வேண்டும் இவர்களுக்கு" என்று கறுவியது. வயல்வெளியில்போய் ஏதாவது சிட்டுக்குருவிகளை வேட்டையாடலாம் என்று வெளியே வந்தது. சில சிட்டுக்குருவிகளைக் கலைத்துக்கொண்டே ஒரு பெரிய சோலைக்கு வந்தது.

அதோ !... அது பெற்றம்மாவேதான். குஷிபிறந்தது ராஜிக்கு. பதுங்கியது ; பாய்ந்தது. பெற்றம்மாவோ சிறகடித்துப்பறந்தது. நிமிர்ந்து பார்த்தபோது துறவற உடையணிந்த ஒரு மனிதர் கையில் இருந்தது பெற்றம்மா. பயத்தோடு அவரது ஊதா நிறத் துறவற உடையினுள் பதுங்கியது. துறவி நோக்கினார் ராஜியை. "அருமைத்தங்கை ராஜி !... பெற்றம்மாவை நீ வேட்டையாடலாமா?..." அன்போடு கேட்டார். பூனைக்குட்டிக்கு வெயர்த்தது. தப்பித்து ஓடவும் வழியில்லை. அவர் பாதத்தில் மண்டியிட்டு வணங்கியது. கீழே அமர்ந்து அதனைத் தடவிவிட்டார் துறவி. "ராஜி !...இறைவன் உங்களையெல்லாம் அன்பாக வாழும்படி இந்த அழகான உலகிலே விட்டார். மனிதர் தான் இறையன்பை மறந்து ஒருவர் ஒருவரை விழுங்கப் பார்க்கின்றார்கள், நீங்களும் இப்படிச் செய்யலாமா !... பெருந்தன்மையாக நடக்க வேண்டாமா?..." என்றார். அந்த அன்புக் குரல் ராஜியை அடிபணியவைத்தது, மியாவ் !... மியாவ் !... என்றது அவர் கட்டளையை ஆமோதிப்பது போல். அவரது இடுப்பில் தொங்கிய ஜெபமாலை மணிகளைத் தட்டிப்பார்த்தது தன் கால்களால். "ராஜி !... ஜெபமாலை ஜெபிப்பதற்கு !... தட்டி விளையாடுவதற்கல்ல! ......" செல்லமாகத் தட்டிவிட்டார் அதன் கன்னத்தை. மியாவ் !... கத்தியது ராஜி !...மகிழ்ந்தார் துறவி !...

### திரும்பி வந்தாள் பைங்கிளியே! .... மெய்யம்மா !....

சுற்றிப்பார்த்தது ராஜி. தான் மட்டுமா அங்கே நின்றுகொண்டிருந்தது இல்லையே ! ... முயல்மாமாக்கள், அணில் தங்கைகள், சிட்டுக்குருவிச் சிறுமிகள், எருது அப்பாக்கள், குதிரை மைத்துனர்கள், மயில் அக்காமார், மான் தம்பிமார் எல்லாம் துறவியைச் சுற்றி ஆவலோடு நின்றுகொண்டிருந்தன, திகைத்துப்போன ராஜியை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்தது துறவியின் அழைப்பு. "இங்கே வா ராஜி !...பெற்றம்மாவைப் பத்திரமாக வீடு கொண்டுபோய்ச் சேர்ப்பது உன் பொறுப்பு. அந்தவீட்டுச் சிறுவருடன் சேர்ந்து அதனைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள். மிருகங்கள் பறவைகளாகிய உங்கள் வாழ்வில் என்னை ஒரு முறைதரிசிப்பதற்கு உங்களுக்கு இறைவன் வரந்தந்துள்ளார். சரிபோய்வா!... அடைக்கலாங் குருவிகளை ஆவலுடன் காக்கும் தேவன் உங்களையும் காப்பாராக" விடைகொடுத்தார் துறவி. சிலுவையடையாளமாக ஆசீரும் அளித்தார். வாயில் கவ்விப் பெற்றம்மாவை வீடுசேர்த்தது ராஜி, சிறுவர் குதுகலித்தனர். அதிசயித்தனர். ராஜியைப் பாராட்டினர், பத்திரிகைகள் செய்தி கூறிற்று.

நாட்கள் சில சென்றன. "அம்மா ! ... எனது செபப்புத்தகத்திலிருந்த புனித அசிசி பிரான்சிஸ்குவின் படத்தைக் காணவில்லையேயம்மா !...எங்காவது விழுந்திருக்கும், யாராவது கண்டீர்களா ! ... " கேட்டாள் சாந்தா. "இல்லையே" என்றனர் ஒவ்வொருவரும். "பரவாயில்லை ; கவலைப்படாதே. கட்டளைச் சுவாமியாரிடம் கேட்டால் வேறொன்று தருவார்" என்று கூறிவிட்டுத் தன் அலுவலைக் கவனிக்கச் சென்றாள் அம்மா. ராஜி பாய்ந்து போய்த் தான் படுக்கும் மறைவிடத்தைப் பார்த்தது. திருப்தியோடு மியாவ் !... மியாவ் !... என்றது. அங்கே அதுவாழ்வில்ஒருமுறை அதிர்ஷ்டமாகச் சந்தித்த அந்த அசிசி பிரான்சிஸ்குத் துறவியின் படம் பத்திரமாக இருந்தது. ஒரு "கும்பிடு" போட்டுவிட்டுத் திரும்பியது சாந்தா தட்டிலூற்றிய பாலைக் குடிக்க.

**"புனித அசிசிப் பிரான்சிஸ்கு என்னும் அர்ச்சியசிஷ்டவர் மிருகங்கள், பறவைகளின் பிரியமான தோழன்" என்பது நேயர்கள் அறிந்த விடயம்தானே !...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். மாற்கு சுவிஷேம்—தொடர்ச்சி

## அர்ச். மாற்கு சுவிசேஷத்திலிருந்து பரீட்சைக்குக் கொடுபடக்கூடிய வினுக்கள்

1. அர்ச். மாற்கு என்பவர் யார்? இச்சுவிசேஷத்தை யாருக்காக, என்ன நோக்கத்திற்காக எழுதினுர்?
2. சுவிசேஷத்திலிருந்து ஆதாரங்கள் காட்டி இச்சுவிசேஷம் அர்ச். பேதுருவானவரின் சீஷனும் அதற்கு விளக்கமளிப்பவருமான மாற்குவினுல், அர்ச். பேதுருவினுல மனந்திருப்பப்பட்ட ரோமராகிய பிறசாதியாருக்கு எழுதப்பட்டதென நிரூபிக்குக.
3. அர்ச். மாற்குவின் சுவிசேஷத்தைப் "புதுமைகளின் சுவிசேஷம்" என அழைப்பதற்குச் சுவிசேஷத்திலிருந்தே ஆதாரங்கள் எடுத்து நிரூபிக்குக.
4. "கிறீஸ்து தேவ குமாரன்" என்று புதுமைகள்மூலம் நிரூபிப்பதே மாற்கு சுவிசேஷத்தின் நோக்கம். இந்நோக்கம் நிறைவேறியதென்பதற்குச் சுவிசேஷத்திலிருந்து ஆதாரங்கள் காட்டுக.
5. ஸ்நாபக அருளப்பரைப்பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுக. கிறீஸ்துவின் மகத்துவத்தையும் தனது தாழ்ந்த நிலையையும அருளப்பர் எவ்வாறு சுட்டிக்காட்டுகிறார்? அருளப்பரின் ஞானஸ்நானத்திற்கும் கிறீஸ்துவின் ஞானஸ்நானத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன? இந்த ஞானஸ்நானத்திற்கும் நாம் பெற்றுள்ள ஞானஸ்நானத்திற்கும் இடையில் உள்ள ஒப்புமை என்ன? (1 : 2—8 ; 6 : 14—29).
6. முதல் நான்கு சீஷர்களும் அழைக்கப்பட்ட விதத்தை விபரி? இந்நாலு சீஷர்களும் அவ் அழைப்புக்கு இணங்கிய விதத்திலிருந்து சந்நியாச அல்லது குருத்துவ அந்தஸ்துக்கு நாம அழைக்கபபடும பொழுது நாம எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று விளக்குக (1 : 16—20).
7. ஓய்வுநாளில் கப்பர்னுவும் ஊரில் தேவாலயத்தில் அசுத்த அரூபி பிடித்தவனைக் குணமாக்கியதை விபரி? இவ் அற்புதத்திலிருந்து இச்சுவிசேஷம் ரோமருக்கு எழுதப்பட்டது என நீர் எவ்வாறு நிரூபிக்கலாம (1 : 21—28)
8. பேதுருவானவரின் மாமியார் குணமடைந்த வரலாற்றைக் கூறுக? இச் சந்தர்ப்பத்தில நடைபெற்ற சமபவத்தின அற்புத இயல்பை மாற்கு எவ்வாறு காட்டுகிறார் என விளக்குக (1 : 29—31).
9. குஷ்டரோகி குணமாக்கப்பட்ட வரலாற்றைக் கூறுக? இச் சந்தர்ப்பத்தில் குஷ்டரோகி தான கிறீஸ்துவிற்கொண்ட விசுவாசத்தை எவ்வாறு காணபித்தான? இக்குஷ்டரோகியின நடத்தையிலிருந்து நாம் இறைவனிடம் சலுகைகள் கேட்குமபோது எவ்வித மனப்பானமையுடன கேட்கவேண்டும என்பதை விளக்குக. தான குஷ்டரோகியைக் குணமாக்கியதாக எவருக்கும் கூறவேண்டாம் என்று கிறீஸ்து தடைசெய்தது ஏன்? குஷ்டரோகி தன்னைப்பற்றி எவ்வித சாட்சியைப பிரதான குருப்பிரசாதிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று கிறீஸ்து கூறினுர்? (1 : 40—45).
10. கப்பர்னுவும் ஊரில திமிர்வாதக்காரன் குணமாக்கப்பட்டதை விபரி? இவ் அற்புதத்தினுல தான் இச சுவிசேஷம் எழுதிய நோக்கத்தை மாற்கு எவ்வாறு அடைந்தார்? இவ் அற்புதத்திலிருந்து "கிறீஸ்து தேவன்" என்பதை நிரூபி? திமிர்வாதக்காரனுக்கு உதவி செய்த நாலவரின் நடத்தையிலிருந்து எம் உதவியை நாடி நிற்பவர்களின் மட்டில் எவ்வித மனப்பான்மையுடையவர்களாய் நாம் இருக்கவேண்டும் என்பதை விளக்குக? (2 : 1—12).
11. லேவி என்பவர் அழைக்கப்பட்ட சம்பவத்தை விபரி? லேவியின் வீட்டில் கிறீஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் பந்தியமர்ந்ததையிட்டு அவர்களுக்கெதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் என்ன? இக் குற்றச்சாட்டுகளுக்குக் கிறீஸ்து கூறியவிடையையும் இச்சந்தர்ப்பத்தினுல் அவர் நமக்குப் படிப்பிக்க விரும்பியவற்றையும் விளக்குக?
12. ஓய்வு நாளை மீறியதைப்பற்றிக் கிறீஸ்துவுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் எதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவை? கிறீஸ்து இக்குற்றச்சாட்டுகளுக்கு என்னபதில கூறினுர்? இச்சந்தர்ப்பத்தில் ஓய்வுநாள் அனுசாரணையைப்பற்றி அவர் என்ன படிப்பித்தார்? ஞாயிறு ஓய்வுநாள் அல்லாமல் ஆக்கப்பட்டதை எவ்வாறு கிறீஸ்துவின் படிப்பினையோடு இணைப்பீர்? (2 : 23—28 ; 3 : 1—6).
13. ஜெருசலேமில் இருந்துவந்த வேதபாரகர் "இவன் பசாசுகளின் தலைவனுகிய பேயெல் செபூலைக் கொண்டு பசாசுகளைத் துரத்துகிறுன்" என்றும் கிறீஸ்துமீது குற்றம் சாட்டினர் கிறீஸ்து இக்குற்றச்சாட்டை எவ்வாறு எதிர்த்தார்? தூய ஆவியானவருக்கு எதிரான பாவம் யாது? (3 : 22—30).
14. உவமை என்பது யாது? கிறீஸ்து ஏன் உவமைகளால் போதித்தார்? விதைவிதைக்கிறவன் உவமையைக்கூறி அதனை விளக்குக? இவ்வுவமையினுல் எமக்குப் போதிக்கப்பட்டிருக்கும் பாடத்தைக்கொண்டு நாம் (அ) தூய ஆவியானவரின் ஏவுதல்களுக்கு, (ஆ) எமது அதிகாரிகள், மூத்தவர்களின் நற்புத்திமதிக்கு, (இ) ஞாயிற்றுக்கிழமைப் பிரசங்கங்களுக்கு, போதனைகளுக்கு எவ்வித மனப்பான்மை காட்டவேண்டும் என்று விளக்குக? (4 : 1—20).
15. காணுமல் வளரும் விதைபற்றிய உவமையைக்கூறி விளக்குக? இவ்வுவமையின் படிப்பினையினுல் திருச்சபையானது மனிதனுடைய உதவியின்றியும் எதிர்ப்புகள் மத்தியிலும் நிலைத்துநிற்கும என்பதைக் காட்டுக?
16. இச்சுவிசேஷத்தில் தேவ இராட்சியத்தைப்பற்றிக் கூறப்பட்டிருக்கும் மூன்று உவமைகளைத் தருக? ஒவ்வொரு உவமையும் தேவ இராட்சியத்தின் எந்த விசேஷ அம்சத்தைக் காட்டுகின்றது (4 : 1—34).
17. கடற்கொந்தளிப்பை அமர்த்திய புதுமையை விபரி. இப்புதுமையிலிருந்து மாற்கு சுவிசேஷம் அர்ச். பேதுருவானவரின சீடனுல எழுதப்பட்டதென்று எவ்வாறு காணபிக்கலாம? (4 : 36—40).
18. ஜெராசெனிய நாட்டுப் பேய்பிடித்தவனை குணமாகிய அற்புதத்தை விபரி? இந்நிகழ்ச்சியின அற்புத இயல்பை அர்ச். மாற்கு எவ்வாறு காணபிக்கின்றூர் என விளக்குக? பன்றிகள் கூட்டம நிர்மூலமாகுமபடி கிறீஸ்து அனுமதித்ததினல் அவர் ஓர் அநீதியான செயலைப்புரிந்தாரா? மற்றும் சந்தர்ப்பங்களில் தாது புதுமைகளையிட்டு மௌனம் சாதிக்கவேண்டும என்று கூறிய கிறீஸ்து, இச்சந்தர்ப்பத்தில் மாத்திரம் [illegible] பேரில் இரக்கமாக இருந்த செயலை எல்லோருக்கும் [illegible] கூறியது ஏன்? (5 : 1—20).

(வளரும்)

# யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ ஐக்கிய வாரக் கூட்டம்

கிறிஸ்தவ ஐக்கியவாரத்தையொட்டி எல்லாக் கிறிஸ்தவ சபைகளின் ஒரு பொதுப் பகிரங்க கூட்டம் 24-1-69 வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி "ரிதிமமர்" மண்டபத்தில் நடந்தேறியது. இக் கூட்டத்துக்குத் தென் இந்திய திருச்சபை அத்தியட்சகர் வண. சபாபதி குலேந்திரன் அவர்கள் தலைமைதாங்கினூர். கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் வண. பிதா எஸ். ஜே. இம்மானுவேலும் மற்றைய சபைகளின் சார்பில் வண. W.A. கில்பேர்க்கும் பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர். வண. கில்பேர்க் கிறிஸ்தவ ஒற்றுமையை எல்லோரும் விரும்புகிறூர்களென்றும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் இவ் வியக்கம் துரித முன்னேற்றம் அடைந்து வருகிறதென்றும் கூறி அமெரிக்காவிலே இம்முயற்சியில் தமது அனுபவங்களை எடுத்துக் காட்டினூர். பிதா இம்மானுவேல் தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"கிறிஸ்துநாதர் திருச்சபையை ஏற்படுத்தியபொழுது அதற்கும அதைச் சார்ந்தவர்க்கும ஒற்றுமையை அதன் இயல்புக்கொடையாகக் கொடுத்தார். இந்த ஒற்றுமை திரித்துவத்தில் இயங்கும் மறைபொருளான ஒற்றுமையை ஊற்றாகவும், முடிவாகவும கொண்டுள்ள ஓர் மறைபொருள். தந்தாய் நீர் என்னிலும் நான் உம்மிலும இருப்பது போல அவர்களும் நமமில ஒன்ருய் இருக்கும்படி வேண்டுகின்றேன் (அரு, 17 : 21). பத்தாவது நூற்றாண்டிலேயும் இடைக்காலத்திலேயும் கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட பிளவுகள் ஒற்றுமை எனும் கொடை மண்பாத்திரங்களாகிய மனிதரினுல் பூரணத்துவத்துடன் சீவிக்கப்படவில்லை என்பதைக்காட்டுகின்றது. நாங்கள் திரும்பவும் உண்மையான ஒற்றுமையை இயங்கச் செய்வதற்கு எம்மில் மூன்று மனப்பான்மைகள் இருக்கவேண்டுமென்றூர், முதலாவதாக பிரிந்த திருச்சபைகள் கிறிஸ்துவின் உண்மையான உருவை உலகிற்கு எடுத்துக்காட்ட முடியாதென்றும், பிளவுகள் இருக்கும்வரையும் நாம் இரட்சணியத்தின் பேரில் எழுப்பும் குறியை உலகம் விளங்கமுடியாதென்றும் மனஸ்தாபப்படவேண்டும். இரண்டாவதாக கடவுளிடத்திலும் நமது சகோதரிடத்திலும் நடந்துபோன துரதிர்ஷ்டங்களுக்கு மன்னிப்புக் கோரவேண்டும். மூன்ருவதாக சபைகளிலும் தனிக்கிறிஸ்தவர்கள்மட்டிலும் கிறிஸ்துவின் உருவத்தைத் தெளிவாக்கும் மனமாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் எல்லோரும் வரவேற்கவேண்டும. அப்பொழுது தான ஒற்றுமைத் தலைவர்களுடைய ஒப்பந்தங்களில் நின்றுவிடாது உண்மையாகச் சபைகள் முழுவதும் துலங்கும் இயல்பான ஓர் ஒற்றுமையாக இருக்கும. எவ்வளவிற்குச் சபைகள் கிறிஸ்துவின உருவத்தை அவைகளில் கொண்டிருக்கின்றனவோ அவ்வளவிற்குப் பரிசுத்த ஆவியானவர் அவைகளில இயங்குவார். எவ்வளவிற்கு ஆவியானவர் இயங்குகின்றூரோ அவ்வளவிற்கு வேற்றுமை ஒழிந்து ஒற்றுமை பிரதிபலிக்கும."

# இல்லறக் கன்னியர்தொண்டும் ஆற்றும்பணியும்

இன்றைய இருபதாம் நூற்றூண்டிலே எம் திருச்சபையானது மறுமலர்ச்சியும், வளர்ச்சியும் அடைந்துள்ளது. எம் திருச்சபையின் ஞான அதிகாரிகள், கன்னியர்கள் பற்றுக்குறையை நீக்க இன்று பரிசுத்த பாப்பானவர் அங்கிகாரமுடன், தீவிர வளர்ச்சியில் ஈடுபட்டுவரும், இல்லறக் கன்னியர்களின் சேவை போற்றப்படக்கூடியதே. சிந்தனைக் கேள்வியை வாசியுங்கள்? பதிலைப் படியுங்கள். இது எங்கே ஸ்தாபிக்கப்பட்டது? இப்பணிசிறந்ததா? இது ஆற்றும் பணிகள் எவை? இச்சபை முன்னேற இன்னும் இடமுண்டா? எவ்வாறு திருச்சபையை விருத்தியாக்கலாம்? இப்படியான சிந்தனைக் கேள்வியின் விடைகளைத் தியானித்து நிதானமான விடையை உங்கள் உள்ளத்தில் பதித்துக்கொள்வதுடன், பிறருக்கும் இதன் மகத்துவத்தை எடுத்துக் கூறுங்கள்.

இச்சபை 1952ஆம் ஆண்டு ஆடி மாதம் 2ஆம்திகதி கனடாவில் வண. லூயிஸ் மரிய பரான்ட், சுவாமி அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்றது. இதன் தாய் மடம் கனடாவிலும் கிளை மடங்கள் வேறுசில இடங்களிலும்வேரூன்றி முன்னேறிவருகிறது. இன்று நம் துறவற சபைக் கன்னியர்களைச் சிஸ்ரர் என்றே அழைக்கிறோம். அவர்கள் புனிதத்தையும், தூய்மையையும் குறிக்கும் வெள்ளை ஆடைகளையே அணிவார்கள். இவர்கள் மறை உலகவாசிகள். ஆனுல் இல்லறக் கன்னியர்களுக்குள், சில ஒற்றுமை வேற்றுமைகளும் உண்டு. இந்த இல்லறக் கன்னியர் வெளி உலகவாசிகள். மற்றைய உலகவாசிகள் எல்லோருடனும் ஒத்துழைத்து பணிபுரிவார்கள். காலத்திற்கேற்ப கோலம் என்பதுபோல, இவர்களை மிஸ், செல்வி என்றும் ஆண்களை திருவாளர் எனவும் அழைப்பார்கள். இவர்கள் [illegible]க்காலம் 3 வருடமாகவும் ஒவ்வொரு வருடமும், தங்கள் வாக்குத்தத்தத்தை இறைவனுக்குப் புதுப்பிப்பர். இவர்களும் குருக்கள் கன்னியரைப்போல் தரித்திரம், அமைச்சல், பூரண கற்புஎன்னும் வாக்குகளையே கொடுப்பார்கள். ஆகவே குருக்கள் கன்னியர் பற்றுக் குறையை நீக்க இவர்கள் புரியும் சேவை அளப்பரியது. இன்னும் இவர்கள் அநேக இடங்களுக்குச் சென்று, கிறிஸ்துவின் இராச்சியத்தைப்பரப்புகிறூர்கள். நோயாளரை பராமரிக்கிறூர்கள். அநேக விசுவாசிகள் உள்ள இடங்களுக்குச் சென்று குருக்களுக்கு உதவியாளராகஇருந்து வருகின்றனர். இவ்விதமான பணிகளைப் புரியும் இச்சபைக்குப் போதிய ஆதரவளித்து வருவதுடன், இச் சபையின் விருத்திபற்றிய சில அம்சங்களைத் துண்டுப்பிரசுரங்களில் வெளியிட்டு, மக்களிடையே வழங்கிவருவதாலும், இச் சபை முன்னேற இடமுண்டென்று கூறுவதில் ஐயமில்லை.

செல்வி செல்வராணி தம்பையா

● மாத்தளை

## சந்நியாச திருஉடை தரித்தல்

மரியாயின் பிரான்சிஸ்க சகோதரர் ஆச்சிரமத்தில் நான்கு இளைஞர்கள் சந்நியாசிகளாக முதல்உடை அணிந்தார்கள். 12-ந்தேதி காலை 7-30மணியளவில் கண்டி மேற்றிராணியாண்டவர் தலைமையின்கீழ் பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின திருச்சபை வழிபாட்டு முறைப்படி சங். சகோதரர் இருதயநாதர் (யாழ்ப்பாணம்), சங். சகோதரர் றெனேவ் (கற்பிட்டி), சங். சகோ. அன்ரன (மட்டக்களப்பு), சங். சகோதரர் மைக்கல் (குருநாகல) ஆகிய நான்குபேரும் அதிவந். லீயோ நாணயக்கார மேற்றிராணியாண்டவரின திருக்கரத்தால சந்நியாசஉடை தரிக்கப்பட்டார்கள்.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இளங்குமரியை அழிக்க முடியாது
### யான்கூறவில்லை ; சரித்திரம் சான்று கூறுகின்றது
### உரோமையிலுள்ள வேதசாட்சிகளின் கல்லறைகள்
### வாய்திறந்து பேசுகின்றன , பண்பாடுகின்றன

# நம்ப முடியவில்லை

— சி. எ. செல்வராசா —

ஹிட்லர்...பயமாக இருக்கிறதா? பயம்வேண்டாம் ஹிட்லர் இறந்துவிட்டார். பாவம், அவர் புதையுண்ட இடத்திலே புல் முளைத்திருக்கும். அவர் உயிர்வாழ்ந்தபோது நடந்த ஒரு சம்பவம்.

அன்று இரவு பத்து மணியிருக்கும். அந்த அறை மின்னொளியில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அழகிய பொருட்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒருநீண்ட மேசை, வெண்பட்டால் அழகாக மூடப்பட்டிருந்தது. மேசைமீது காலியான மதுப்புட்டிகள் அங்குமிங்கும் கேட்பாரற்றுக் கிடந்தன. அம் மேசையைச் சுற்றிப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் இரண்டைத்தவிர ஏனையவையெல்லாம் காலியாக இருந்தன. மதுப் புட்டிகளின் மூடிகள் அங்குமிங்கும் சிதறியிருந்தன. சிகரெட் துண்டுகள் மேசையின் அடியில் நசுங்கியிருந்தன. எஞ்சியிருந்த பிஸ்கட் துண்டுகளை எறும்புகள் முற்றுகையிட மூனைந்திருந்தன. பாடகர்களைக் காணவில்லை. இசைக்கருவிகள் மூலையில் சாத்தப்பட்டிருந்தன. ஒருபணிப்பெண் திடீரென அறையினுள் நுழைந்தாள். அன்றைய சூழ்நிலையில் ஹிட்லரின் பெயரைக் கேட்டாலே வீட்டுக்கதவுகளும், யன்னல்களும், மூடப்பட்டுவிடும். அவ்வளவு பீதியிருந்தது மக்களிடம். ஆனால், அப்பெண்ணிடம் என்ன துணிச்சல்! உரிமையுடன் வந்தாள். வேறு எதற்கும் அவள் வரவில்லை. விருந்துநடந்த அவ்அறையைச் சுத்தம் செய்யவே வந்தாள் அவ்வனிதை. வந்தவள் பாத்திரங்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தாள். ஹிட்லர் தன் கம்பீரமான மீசையைத் தடவிக் கொண்டிருந்தார். அவரையறியாமலே ஏப்பம் அவர் அடிவயிற்றிலிருந்து எழுந்தது. மறுநிமிடம் அவ்வறை முழுவதும் மதுவின் மனம் பரவியது. நானென்றால் மூக்கைப்பிடித்திருப்பேண்; சிறிது தாமதித்திருந்தாலும் வாந்திவந்திருக்கும். அப்பணிப்பெண் அதைக் கவனிக்காமல் தன் முயற்சியில் முன்னேறிக் கொண்டிருந்தாள். அவ்வாசனை அவள் அன்று மட்டுமல்ல தினமும் நுகரும் நறுமணம். ஹிட்லர் அப்பெண்ணையே பார்த்துக்கொண்டிருந்தார். ஹிட்லரின் வலக்கரம் போன்றவன்தான் "கெபல்ஸ்." அவரும் ஹிட்லருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். அவர் கையிலிருந்த சிகரெட் புகையைக் கக்கிக் கொண்டிருந்தது. கெபல்ஸ் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். திடீரென ஒரு முடிவுக்கு வந்தவராக சிகரெட்டை தூரவீசி எறிந்தார். ஹிட்லரை பார்த்து, "இதோ! இமமேசைமேல் இருக்கும் கண்ணாடி டம்ளரை எப்படி தூள் தூளாகச் செய்கிறேனே அதுபோல் இந்த ரோமன்கத்தோலிக்கத் திருச்சபையையும் தகர்த்தெறிகிறேன்" என்று கர்ச்சித்தார். அவர் குரல் எதிரிலிருந்தசுவரில்பட்டு எதிரொலித்தது. உடனே எழுந்து தட்டுத்தடுமாற ஒரு கண்ணாடிக்கிளாசை எடுத்து எதிரிலிருந்த சுவரில் வெறியுடன் வீசியெறிந்தார். கண்ணாடிடம்ளர் கரணமடித்துக்கொண்டு சென்றது. சுவரில் மோதியது. கீழேவிழுந்தது. என்ன ஆச்சரியம்! கண்ணாடி டம்ளர் உடையவில்லை. ஏன்? அதில் ஒருசிறு கீறல் முதலாய் விழவில்லை. ஹிட்லர் ஏளனச்சிரிப்புச் சிரித்தார். கெபல்ஸ் புண்ணில் வேல்பட்டவனைப்போல் சீறி எழுந்தான். தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை காலால் உதைத்தான். அது பணிப்பெண்ணின் காலில்பட்டுச் சாய்ந்தது. வீரன் கை வேல்போல் கெபல்ஸ் வெளியே போனார். அவர் போன காரியம் என்ன ஆயிற்று! அவர் நினைத்தது நடந்ததா? சொன்னதைச் செய்தாரா??......ஏன்? மவுனம்.

அவர் மட்டுமல்ல, அவரைப்போல் கோடிக்கணக்கான கெபல்ஸ்கள் பிறக்கட்டும்! ஆயிரம் ஹிட்லர்கள் அவனியிலே அவதரிக்கட்டும!! இளங்குமரி திருச்சபையை அழிக்க முடியாது... ஏன்? அசைக்கக்கூட முடியாது. ஏனென்று கேட்கிறாயா? ஒரே பதில் தான். "நரகத்தின வாயில்கள் அதை மேற்கொள்ளாது." கெபல்ஸ் நினைத்த காரியம் இவர் மட்டுமல்ல இவருக்கு முன் எத்தனையோபோர் நினைத்து முயன்றனர். ஆனால் தொடுத்துமுடிக்கவில்லை. அன்னையைக் கொன்ற அரக்கன், மனைவியை மாய்த்த மதவெறியன், உல்லாசச் சீமையாம் உரோமையைத் தீக்கிரையாக்கி, தீமுடன் வேடிக்கை பார்த்த விற்பன்னன் முயன்றுபார்த்தான். அவனுக்குப்பின் தோமிசியன் முயன்றுபார்த்தான், முட்டிமோதினான். பயன் பாவம் மண்டை உடைந்ததுதான்! அவனுக்குப்பின் திரன்திராசனின் தீமுயற்சிகள் தீந்துபோயின. அவுரேலியன் அட்டகாசம்என்ன ஆயிற்று! இவர்கள்மட்டுமல்ல இவர்களைவிட சக்திவாய்ந்த சக்கரவத்திகள் செப்திமுஸ்—செவருஸ், மாக்ஸிமின், தேசியுஸ், வலேரியன் அவுரேலியன். ஏன் தீரன் தியோக்கிளேசியன் முயற்சிகள்??? இவர்களால் முடியாதது இனிவேறு யாரால் முடியப் போகிறது. சரித்திரம் கூறும்சான்றை கெபல்ஸ் அறியவில்லைப் போலும்; பாவம்! ரோமன் திருச்சபையை அழிக்க. ஒழிக்க! கோடிக்கணக்கான கெபல்ஸ்களும், ஆயிரக்கணக்கான அந்திக்கிறீஸ்துகளும் அணிவகுத்து வந்தாலும் இளங்குமரியை அழிக்கமுடியாது. யான்கூறவில்லை. சரித்திரம் சான்று கூறுகிறது! ரோமையிலுள்ள வேதசாட்சிகளின் கல்லறைகள் வாய் திறந்து பேசுகின்றன! பண் பாடுகின்றன. நாமும் திருச்சபைக்காக ஜெபிப்போம்!

---

✝

வஸ்தியாம்பிள்ளை இம்மானுவேல்

அவர்கள்

அமரத்துவமடைந்த

## 8-ம் வருட ஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 12-2-1889. | 4-2-1961. |

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

இவரது ஆன்மசாந்திக்காக சில்லாலை, பரி. ஆரோக்கியமாதா ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை 5-2-69இல் ஒப்புக் கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறுவோர் இவருக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். முடிவில்லா [illegible] ஒளிர்வதாக.

சில்லாலை. 9-69

---

# துன்பத்தின் எல்லை

### துன்பம் ஏன் ?

இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவனும வாழ்வதற்கேயன்றி மாள்வதற்கல்ல. நீச்சல் போட்டிபொன்றில் பங்கெடுத்து நீந்தத்தொடங்கியவன் அதில் வெற்றியடைவதற்குக் கரைசேருமட்டும நீந்தியே ஆகவேணடும். அப்படியே நாமும் பிறந்தநாளில்இருந்து வாழ்க்கையென்னும் போட்டியைத் தொடங்கியுள்ளோம. அதில் வெற்றியடைவதற்கு முடிவுவரை வாழ்ந்தே ஆகவேண்டும். இது எப்படி முடியும்? மனிதன் வாழ்க்கையின் பலதொல்லைகளால் அலைக்கப்பட்டுத் துன்பமென்னும் துயரக்கடலில் மூழ்கிவிடுகிறான். பின் அதிலிருந்து தப்பவழியறியாது திக்குமுக்காடுகிறான். இவனுக்கு வாழ்க்கைஎன்பது துன்பம். இதனால் வாழ்க்கை ஒரு கசப்பு. அதன்மேல் பெரும் வெறுப்பு. துன்பமென்னும் இருளால் அவன்வாழ்வு நிறைந்திருப்பதால் இன்பமெனும் ஒளி அவன்கண்களுக்கு மறைந்திருக்கிறது.

இன்னும்சிலர் இன்பம், துன்பம் எனும் இருஅலைகளால் மாற்றிமாற்றி அலைக்கப்படுவதால் இவ்வுலக இன்பம் இன்னும சிலகாலம் நீடிக்காதோஎன எண்ணிஎண்ணி ஏங்குவர். இவர்கள் உள்ளத்தில் அமைதியில்லை. மனதில் நிம்மதியில்லை, முடிவிலா இன்பத்தில் நம்பிக்கையில்லாதவர்கள். இவர்கள் இன்பத்தில் இறைவனைமறந்து துன்பத்தில்மட்டும் மனம்மாறுபவர்கள்.

இவ்வுலகில் ஒருசிலரே இன்பத்திலும்சரி, துன்பத்திலும்சரி "இறைவா நீயே தஞ்சம்" எனக்கூன்று அவர் மீதுள்ள அன்பிலிருந்து மாறாதவர்களாய், சற்றும் குறையாதவர்களாய்த் துன்பத்தை இன்பமாகமாற்றும் வீரர்களாய், மறுவாழ்வில்வரும் முடிவில்லா இன்பத்தில் திடமனதுள்ளவர்களாய் இருக்கின்றனர். இவர்களுக்கு இவ்வுலக இன்பதுன்பம், பெருமை புகழ்எல்லாம் வெறும் நீர்க்குமிழி போன்றது. துன்பமேன் என்றவினாவுக்கு விடையறியவிரும்புவோர் இதையறிந்து உணருங்கள். இரவுக்குப்பின் பகல்; புயலுக்குப்பின் அமைதி. துன்பத்திற்குப்பின் இன்பம். ஆனால் மறுவுலகில் நாம் பெறவிருக்கும் இன்பம் மாறாது நிலைத்துநிற்கும். முடிவில்லாமல் நீடித்திருக்கும்.

### ஏன் பிறந்தேன் ?

குயவன் படைத்த பானைஒன்று அவனைப்பார்த்து, "ஏன்ஐயா என்னைப் படைத்தீர்?" எனறால் அதற்கு அவன், "எனக்கும் பிறருக்கும் பயன்படும்படியாகத்தான் நான் உன்னைப் படைத்தேன்" என்று பதிலகூறுவான். இதே வினவை நாம் நம்மைப்படைத்த இறைவனைக் கேட்போமானல், "உனக்கு இன்பத்தையளிக்கவும், பிறருக்கு நீ என் புகழையுரைக்கவும், இறுதியில நீ என்னோடு ஒன்றித்து என்னை மகிமைப்படுத்தவுமே உன்னைப் படைத்தேன்" என்ற பதில்கிடைக்கும்.

### துன்பம் துடைப்பவர் யார் ?

"ஐயோ என்ன கொடுமை இது! இந்த நோயானது ஓயாமல் நம் குடும்பத்தைத் தொடர்ந்து வருகின்றதே; இதற்கு ஒரு முடிவில்லையா?" இது ஒரு குடும்பத்தினர் புலம்பல்.

அடுத்தவீட்டினர் "ஏன் இந்த வறுமை எம்மை வாழவிடாமல் வாட்டுகின்றது. நம்வயிறே வரண்டுபோகின்றது, நம் வறுமையைப்போக்க வல்லவர்ஒருவர் இவ்வுலகில் இல்லையா?" இதுவும் ஒரு புலம்பல். மனிதன்மீது கொண்டுள்ள அளவில்லா அன்பினல் இறைமகன் மண்ணிலே மனுவுருஎடுத்தார். துன்பத்தின் அடிமையிலிருந்து எமக்கு விடுதலை பெற்றுத்தர, பாவப்பாதையிலிருந்து நம்மைப் பரகதிக்கு மீட்டுச் செல்ல ஈராயிரம் ஆண்டுகட்குமுன் அன்பர்யேசு இப்பாரிலே பாலனய்ப் பிறந்தார். அவர்தான் துன்பம்துடைக்க வந்த அன்பின் அரசர்.

### இன்பத்தின்வழி துன்பம்

துன்பத்தின் ஆட்சியிலிருந்து நாம் மீட்சிபெற இறைமகன் இவ்வுலகம்வந்தும், துன்பம்ஏன் இன்னும் நிலைத்திருக்கின்றது? மனிதன் என்று பாவத்திற்கு அடிமையாகினனே அன்றே துன்பம் அவனை ஆட்கொண்டது. பாவமே துன்பத்தின் காரணம். இப்பாவத்தைப் போக்கத்தான் இறைமகன் தம்மைப் பலியாக எமக்குத் தந்தார். பாவத்திலிருந்து நம்மைப் பரிசுத்தப் படுத்தப் பரிகாரம்செய்வது நமது கடமை. இதனுற்றான் இறைவன் துன்பத்தை இவ்வுலகில் அறவே அழிக்கவுமில்லை, அன்றேல் அதை மாயமாய் மறைக்கவுமில்லை. மாறாகத் துன்பத்தின் பாதைதான் இன்பத்தின் எல்லைக்கு இட்டுச் செல்கின்றது என்பதை அன்பர் யேசு தம்வாழ்விலே காட்டியுள்ளார்.

### இறைமகன் காட்டிய வழி :

உலகத்தையே தன் உள்ளங்கையில் அடக்க வல்லமைபடைத்த இறைவன் இவ்வுலகிலே மனிதனய்ப் பிறப்பதற்குப் பளிங்கினலான மாளிகையும் போதுமான இடமன்றோ? இதற்கு மாறாக அவர் யாருமறியாத அடக்கவொடுக்கமான ஒரு மாட்டுக்கொட்டிலிலே பிறந்தார். மாசுபடிந்த மானிடரைவிட மாசற்ற இறைவன் தம்மைத் தாழ்த்தியுள்ளார். ஒன்றும் குறைவு பெறாமல் எல்லாம் நிறைவுபெற்றுள்ள இறைவன் ஏன் வறுமையின் சூழ்நிலையில் மறைந்து பிறக்கவேண்டும்? அரசர்களுக்கெல்லாம் அரசராகிய அன்பின் அரசர் ஏன் மனிதஉடலுக்கு அடிமையாக வேண்டும்? ஏன் மனித ஆணைக்கு அடிபணியவேண்டும்? மன்னர்களுக்கெல்லாம் மன்னராகி மூவுலகையாளும் முடிவில்லாமன்னர் ஏன் முப்பதாண்டுகாலம் மறைந்தவாழ்வு வாழவேண்டும்? குற்றமற்ற குருவைக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

---

## மெசஞ்சர் பத்திரிகை.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுத்தஇவ்வருடம்மாசிமாதம் 11ஆம் திகதி "மெசஞ்சரின்" விசேஷ பதிப்பு ஒன்று வெளிவருகின்றது. இந்த நூற்றாண்டு காலத்திலே பத்திரிகை உலகில் பலவகைக் கஷ்டங்கள் தோன்றினதன் காரணத்தினல் ஆரம்பிக்கப்பட்ட மறு சில பத்திரிகைகள் கைவிட்ட பொழுதும் "மெசஞ்சர்" தொடர்ந்து நடத்தப்பட்டு வந்திருப்பது இலங்கைக் கத்தோலிக்கரின் பாக்கியம். அது மாத்திரமன்று. கிழக்குத் திசையில் தோன்றிவரும் கத்தோலிக்க பத்திரிகைகளில் சில சிறந்தது என்னும் கீர்த்தியும் அதற்கு உண்டு.

---

## உங்கள் புதியவருடத்...

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

வரும் ஒவ்வோர் புதிய மனிதராக மாறி, கிறீஸ்துவின் சாயலெடுத்து, புதிய தீர்மானங்களை அமைத்து புதிய வருடத்தை சமாதானத்தின் வருடம் ஆக்குவோம்.

நமது பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பிறை, நமது சமாதானத்தை அதிகம் அதிகம் விரும்பியே புதுவருடத்தின் முதல்தினத்தை உலகின் சமாதான தினமாகப் பிரகடனம் பண்ணியிருக்கிறார். ஆகையால் கிறீஸ்து உலகுக்குக் கொணர்ந்த சமா[illegible]று பெறப் பிரார்த்திப்போமாக.

எஸ். கே. பத்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## சுதந்திர தினவிழா

மாசிமாதம் 4-ம்திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை வருகின்ற இலங்கைச் சுதந்திரதினவிழா யாழ்நகரிலும், மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள காரியாதிகாரிகளின் பிரிவுகளிலும் வழமைபோலக் கொண்டாடப்படவிருக்கிறது. அன்று தினம் நகரின் விளையாட்டரங்கிலே பொலிஸ், இராணுவ, கடற்படைவீரர்களின் அணிவகுப்புகளும, பாடசாலைப்பிள்ளைகளின் அணிவகுப்பு, உடற்பயிற்சிகளும், காரியாதிகாரிகளின் பிரிவுகளிலே விசேடகலைநிகழ்ச்சிகளும், விளையாட்டுப்போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன.

## கீரிமலை மண்டபம்

நீராடவென்று கீரிமலைக்குச்செல்லும் யாத்திரிகர்கள், உல்லாசப் பிரயாணிகளும், ஏனையோரும் இளைப்பாறுவதற்கென அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தை இங்கு விஜயஞ்செய்திருக்கும் உள்ளூராட்சிமந்திரி திரு. ஆர். பிரேமதாசா நாளை 2ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கவிருக்கின்றார்.

## ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை

கல்விநூற்றாண்டு விழாசம்பந்தமாக விற்பனையாகிவரும் "சியாவச" சுவீப்திக்கெற்றுகளை மாணவர்கள் எவரையும் கட்டாயப்படுத்தி விற்பனைசெய்யப்படாதென்றும், இந்தத் திக்கெற்றுகளை வாங்காதுவிடின் பணிஸ், பிஸ்கோத் கிடையாதென மிரட்டி அவைகளை விற்பனைசெய்வது கண்டுபிடிக்கப்பட்டால் தகுந்தநடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வடபகுதியிலுள்ள கல்லூரிகள், பாடசாலைகளின் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வடமாநில கல்விஅதிபதி திரு. எஸ். தணிகாசலம் ஓர்எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

## நீரில் மூழ்குகின்றன

முசகெலே எனுமிடத்தில் அமைக்கப்பட்டுவரும் பிரமாண்டமான அணைக்கட்டுவேலை வருகிறபங்குனி மாதம் முடிவடைந்ததும் மஸ்கேலியா, கினடயர்எனும் இருபட்டினங்களும் தண்ணீருள்ளே முற்றாகத் தாழ்ந்துவிடும். அவற்றிலே வசித்திருந்தமக்கள் வேறிடங்களில் குடியேறிப்போய் வசிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## கப்பல்தாமத கட்டணம்

கொழும்புத்துறைமுகத்துக்குவரும் வியாபாரக்கப்பல்களிலிருந்து சாமான்களைத் தாமதமின்றி இறக்குமதிசெய்யாத காரணமாகச் சென்ற1968ஆம் ஆண்டிலே கப்பல்தாமத கட்டணமாக அவற்றிற்கு சுமார்1கோடியே 76லட்சம்ரூபாவை அரசாங்கம் செலுத்தியிருக்கின்றது. இதில் உணவுப்பகுதி மாத்திரம் 1கோடியே 20லட்சம்ரூபா செலுத்தியுள்ளது.

## விவசாயமன்னர்கள்

இம்முறை விவசாயமன்னர்கள் போட்டியில 35,000 விவசாயிகள் போட்டியிடுவார்களென்றும், இவர்களிலே விவசாயமன்னர்களாகத் தெரிவுசெய்யப் படுகிறவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு 325புசல்நெல்லை விளைவிப்பார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. போட்டியில் கலந்துகொள்ளும் விவசாயிகளில் பெரும்பாலானோர் இம்முறை எச். 4, எச் 8 என்ற பச்சைப் பெருமாள்போன்ற அதிசய நெற்களையே விதைத்திருக்கிறார்கள்.

## மாணவர்களுக்கு வேண்டுகோள்

"இன்று இந்தியமாணவர்களிடையே கட்டுப்பாடும், ஒழுக்கமும் நிலைகுலைந்திருப்பது எனக்குக் கவலையைத்தருகிறது; இது பொதுவான நோய்க்குள்ள அறிகுறியாகும்; இன்றைய மாணவர்களே நாளையதலைவர்கள் என்பதால் மாணவர்குழப்பம் மகா ஆபத்தானது; இவர்கள் காந்திஜியின் போதனைப்படி தாங்களே தங்களைப் புனிதப்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும்" என்று சென்ற25ஆம் திகதி சனிக்கிழமை இந்திய 19-வது குடியாசுத்தினத்தை முன்னிட்டுத் தேசமக்களுக்கு விடுத்தவேண்டுகோளிலே இந்தியஜனாதிபதி வானொலி மூலம் ஒருசெய்தி விடுத்திருக்கின்றார்.

## பூநகரியில் காணிப்பங்கீடு

பூநகரி—மன்னார்வீதியிலே ஆளுக்கு 2ஏக்கர்வீதம் 100பேருக்குக் காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. காணிகள்கேட்டு விண்ணப்பம் செய்திருந்த சுமார்250பேரில் இவர்களே தெரிவு செய்யப்பட்டார்கள். இந்தக்காணிகளில் கிணறுவெட்டவும், வீடுகள் கட்டவும் இவர்களுக்கெல்லாம் அரசாங்கம் பணஉதவிசெய்யும்

## இருமடங்கு நெல்

இலங்கையிலே சென்ற இரு வருடங்களிலும் நெல்விளைவு நூறுசதவிகிதம் — அதாவது இருமடங்காக அதிகரித்திருக்கிறது 1967-ம் ஆண்டு விளைந்த நெல 3 கோடியே 7 லட்சம் புசல். ஆனால், சென்றஆண்டு விளைந்த நெல் 6 கோடியே 30 லட்சம் புசலாகும். இரு வருடங்களிலும் உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் ஆகியவற்றின் வீதமும் வெகுவாக அதிகரித்துள்ளன.

## பண்டமாற்று வியாபாரம்

சீனாவுடன் போன்று அரசாங்கம் பாகிஸ்தானுடனும் பண்டமாற்றுவியாபார உடன்படிக்கை ஒன்றுக்கு இப்போது கைச்சாத்திட்டுள்ளது. ஆனால், இது அரிசி-தேயிலை வியாபாரமாகும். இதன்படி 76 லட்சம் ரூபா பெறுமதியான தேயிலையைப் பாகிஸ்தான் இலங்கையிடமிருந்து வாங்கவும், இதற்குப்பதில் இலங்கை 10 000 தொன் உயர்தர அரிசியைப் பாகிஸ்தானிடமிருந்து வாங்கவும் உடன்பாடாயிருக்கிறது.

## பாம்பு நஞ்சு

பாம்பு நஞ்சு கிடைப்பதற்கரிதான சில நாடுகளிலே அதற்கு மிகுந்த பெறுமதியிருக்கிறது. ரூஷியாவில் பாம்பு நஞ்சைக்கொண்டு இருதயம், ஈரல், சுவாசப்பை ஆகியவற்றில் உண்டாகின்ற குணப்படுத்தமுடியாத சில நோய்களைக் குணப்படுத்திவருகிறார்கள். அவ்வாறே ஜேர்மனியிலும், ஜப்பானிலும் பாம்பு நஞ்சு தேவைப்படுகிறது. அதனால் பாம்பு நஞ்சு ஏற்றுமதியை இங்கே ஆரம்பித்தால் வருடம் ஒன்றுக்கு 30 அல்லது 35 லட்சம் ரூபா பெறுமதியான பாம்பு நஞ்சையும், மற்றும் நச்சுமூலிகைகளையும் ஏற்றுமதிசெய்ய முடியுமென்று சொல்லப்படுகிறது.

## இரணைமடுக் குளம்

இரணைமடுக் குளத்தைத் திருத்தும் வேலை இப்பொழுது துரிதமாக நடைபெற்றுவருகிறது. பெருமழை பெய்யும் காலத்திலே அது பெருகி நீர்வழிந்தோடும்போது கலைகள் பழுதடையாமல் தடுக்குமுகமாக ஐந்து மதகுகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. 30அடி உயரமான இந்தக்குளத்திலே 82,500கனஅடி தண்ணீர் தேங்கி நிற்கவும், சுமார் 20,000 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசனவசதியளிக்கவும் இப்போது வாய்ப்பிருக்கிறது. கலைமட்டம் மேலும் இரண்டு அடி உயர்த்தப்படுமானல் மேலும் 2,000 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசனவசதியளிக்கமுடியும்.

## துன்பத்தின் எல்லை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றவாளியாகக் கற்றூணிலே கட்டியடிப்பதைப் பார்த்தும நம் கல்நெஞ்சம கசிந்துருகாதோ! கல்வாரிமலைமேலே கள்வரோடு கள்வனாகக் கழுமரத்திலே ஆணிகளால் அழுத்தப்பட்டுத் தம் உயிர் இழந்தாரே யாருக்காக? பாவமற்றவர் இப்படாதபாடுகளைப் பட்டிருக்கப் பாவத்திற்கு அடிமையான பாவிகள் நாம்ஏன் துன்பமெனும் சிலுவையைக்கண்டு பயமடையவேண்டும? துன்பம் தவிர்க்கமுடியாத ஒன்று. துன்பம் நம் ஆன்மாவைத் தூய்மைப் படுத்தும். எனவே துன்பத்தைக்கண்டு துயரம் கொள்ளாதீர். மாறாக அதனால் வரும் இன்பத்தையெண்ணி அகமகிழ்ச்சி கொள்ளுங்கள்.

**துன்பத்தின் முடிவு :**

இறைமகன் இவ்வுலகில் பிறந்திராவிட்டால் எப்படிநாம் அவரது அன்பை அறிந்திருக்க முடியும். அவர் தம் பாடுகளைப் பட்டிராவிட்டால் எப்படி நாம் ஈடேற்றம் அடையமுடியும். மண்ணுலகில் மரித்திராவிட்டால் எவ்வாறு உயிர்த்தெழுந்து விண்ணுலக மகிமையை அவர் அடைந்திருக்க முடியும். இறைமகன் பிறந்தார் நம் பாவக்கறையைப் போக்க. நம் துன்பத்தைப்போக்கி நமக்கு நித்திய இன்பத்தையளிக்க. எனவே துன்பம் நம்வாழ்வின் முடிவல்ல முடிவிலா இன்பம்தான் நம்வாழ்வுக்குப் பின்வர இருப்பது. எனவே, வாழ்க்கைப்போட்டியில் ஈடுபட்டுள்ள நாம முடிவுவரை விடாமுயற்சியுடன் சிறந்தமுறையில் வாழ்ந்தால் பரிசு கிடைப்பது திணணம். நோய்நொடியிலும்சரி பஞ்சம் பசியிலும்சரி கொஞ்சமும் மனந்தளராதவர்களாய், அஞ்சா நெஞ்சத்தோடு இறைவனோடு ஒன்றித்து அவர்மீது நிறைந்த நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

**தூய்மையும் அன்பும் :**

கிறீஸ்துபிறந்த நன்னாளை நாற்றிசையிலும் பெருமையோடு கொண்டாடும் நாம் உடையிலும் நடையிலும் மட்டுமல்ல உள்ளத்திலே அவரது நற்பண்புகளை, அருமபெரும் குணங்களைக் கொண்டவர்களாய் இருக்கவேண்டும். கிறீஸ்து நம்மிடம் விரும்புவது குழந்தையுள்ளம். அதாவது கள்ளங் கபடமற்ற, கருணைநிறைந்த தூயஉள்ளம். நமது உள்ளத்தூய்மை உதட்டிலேயும் வெளியாகவேண்டும். எனவே நமது வார்த்தை நீதிக்கும நேர்மைக்கும், அன்புக்கும், பண்புக்கும்மாறாக மீறிப்போதல் கூடாது. உள்ளத்திலே இறைவன்மீது உண்மையன்புள்ளவன் பிறரையும் தன அன்பிலிருந்து அகற்றிவிடமாட்டான். ஏனெனில் இறையன்பும் பிறர் அன்பும் ஒன்றோடொன்று தொடர்புள்ளது. உலகம் ஒரு குடும்பம். இறைவன் அதற்குத் தந்தை. எனவே நம் செயல் அன்பிலும்அறத்திலும் அடங்கியிருக்கவேண்டும்.

**அன்பின் ஒன்றிப்பு :**

நாம் என்றும் சிந்தனை, சொல், செயல்களில் அன்புள்ளவர்களாய் இருக்க விரும்பின் அன்பின் அரசராகிய யேசு நம் உள்ளத்தில் அரசாளவேண்டும். எம் உள்ளத்தில் அவர் குடிகொள்ள நாம் அவருக்கு முழுஇடமளிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம்உள்ளம் தூய்மைப்படும். அன்பு எனும்ஆறு ஊற்றெடுத்துப் பிறரிடத்திலுமபாயும். உண்மையான இறையன்பு நம் உள்ளத்திலிருந்தால் இன்பவெள்ளத்தால் அது நிறைந்திருக்கும். யேசுவோடு நாம் ஒன்றுபட்டிருந்தால் என்றும் நம் இல்லங்களில் சமாதானம்நிலவும். எனவே யேசுவோடு நாம் துன்பவேளையிலும்சரி, இன்பவேளையிலும்சரி உரையாடி, உறவாடி ஒன்றித்திருப்போம். அப்பொழுது துன்பம இன்பமாகும். பின்பு அது நித்திய இன்பமாக முடிவில்லாது நீடித்திருக்கும். எனவே நாம் மனம்மகிழ்ந்து வானவரோடுகூடி, "பூவுலகில் நனமனத்தோர்க்கு அமைதியும ஆகுக" என்று பாடுவோம. இறைவனைப் போற்றுவோம். வாழ்க இறைவன்! வளர்க அவர் புகழ்!!

ஜே. என்.

## யாத்திரை அலவன்ஸ்

பிறநாடுகள் செல்லும் யாத்திரிகருக்கென அரசாங்கம் செய்துள்ள கட்டுப்பாடுகளின்படி, ஒருவர் தனது சீவிய காலத்தில் ஒருமுறைமட்டும் பிறநாடுகளுக்கு யாத்திரைசெய்யலாம். கத்தோலிக்கர் 75பவுண் அலவன்ஸுடன் லூர்துபதிக்குச் செல்லலாம். ஏனையகிறிஸ்தவர்கள் 50பவுண் அலவன்ஸுடன் ஜெருசலேமுக்குச் செல்லலாம். இக்கட்டுப்பாடுகளை மீறுவதிலே கத்தோலிக்கரும் கிறிஸ்தவர்களும் அல்லாதவர்கள் தங்களையும் அவர்களைப்போல் காட்டிக்கொண்டு அலவன்ஸ்பெற்று யாத்திரைசெய்வது கண்டறியப்பட்டுள்ளது. அதனால் கிறிஸ்தவசபைகளின் அதிகாரிகள் தகுந்தநடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

## ஆங்கிலத்தின் ஆவசியகம்

"ஆங்கிலம் உலகுக்கு ஒருயன்னல் போன்றது; வெளிஉலகுடன தொடர்புகொள்ள இளைஞர்களுக்கு நல்லஆங்கிலஅறிவு ஆவசியகமாகும்; ஓர்உலகமொழியாக இருந்துவருவதால் அதனைப்படிக்க ஆனமுயற்சியெல்லாம் செய்யப்படவேண்டும்; சிங்களத்தையோ அன்றேல் தமிழையோ படிக்கும் இளைஞர்கள் ஆங்கிலத்தையும் ஒருபாடமாகப் படிப்பதற்கும் முயற்சியெடுக்க வேண்டும்" என்று வெலிகடமுல்லையிலே நடைபெற்ற ஒருகூட்டத்தில் கனம். இராஜகீய பண்டித சிறி சித்தார்த்த எனும் பிரபல பௌத்த குருபேசியிருக்கின்றார்.

## நான்கு வருட அவகாசம்

வருகிற மாசிமாதத்திலே பாடசாலைகளிலிருந்து வேலைநீக்கம் செய்யப்படவிருந்த சுமார் 2,000 மாணவ ஆசிரியர்களுக்கு மேலும நான்கு வருட அவகாசம கொடுக்கத் தீர்மானமாயிருக்கிறது. 1964-ம் ஆண்டு ஆசிரியர்களாக நியமனம்பெற்ற இவர்கள் நான்குவருடகாலத்தில் ஆசிரிய கலாசாலைகளில் சேர்ந்து தராதரப்பத்திரம் பெற்றுத் தங்கள் சேவையை நிரந்தரமாக்க வேண்டுமென்பது நிபந்தனையாகும். ஆனால், இவர்கள் அதனை நிறைவேற்றத் தவறிவிடவே, 1973 ஆம் ஆண்டு மாசிமாதத்துள் அதனை நிறைவேற்றவேண்டுமென அவகாசம் கொடுபட்டிருக்கிறது.

## நன்றித்துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். யூதாததேயு, அர்ச். செபஸ்தியார், குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாள், அர்ச். சூசையப்பர் இவர்களின் மன்றாட்டினாலும் பரிசுத்த ஆத்துமாக்களின் வேண்டுதலாலும் என்மகனுக்கு வயிற்றில் ஏற்பட்ட கடும்நோய் சுகமடைந்து வருகிறது. முற்றிலும் நற்சுகம் கிடைக்கவும், அவர்குடும்பத்தை ஆசீர்வதிக்கவும் மன்றாடுகிறேம்.

மிஸிஸ் எஸ். ஜே. பெர்னாண்டோ

பெரியதெரு, யாழ்ப்பாணம். 8-69

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969ஆம்ஆண்டு மாசிமீ 1ஆம்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org